பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | வைகாசி 12 | சனிக்கிழமை | 27.05.2023 | கதிர் 198

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி செயலகம் தடை உத்தரவு

(ந.லோகதயாளன்)

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின்கீழ் உள்ள எந்தவொரு நிலமும் அனுமதி பெறப்படாது முதலீட்டாளர்களுக்கு விநியோகிக்கப்படக்கூடாது என ஜனாதிபதி செயலகம் எழுத்தில் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஜனாதிபதியின் மூத்த உதவிச் செயலாளரான ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் நேற்று இது தொடர்பான சுற்றறிக்கை பக்ஸ் மூலம் அவசரமாக யாழ்ப்பாணக் காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணம் நெடுங்கேணிப் உள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 2 ஆயிரம் ஏக்கர் காணியை இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் ஏற்பாட்டில் சவூதி அரேபியாவைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் சிலர் நேரில் சென்று பார்வையிட்டிருந்தனனர்.

இது தொடர்பான செய்தி காலைக் கதிர் பத்திரிகையில் வெளியாகி இருந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்தின் இந்த அறிவுறுத்தல் வந்துள்ளது.

ஏற்கனவே நெடுங்கேணி நயினாமடு பகுதியில் சீன உற்பத்தித் தொழிற்சாலைக்கு என ஆயிரம் ஏக்கர் நிலத்தை வழங்கும்படி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார். இந்தப் பினனணியிலேயே காணிச்சீர்திருத்த ஆணைக் குழுவிற்கு ஜனாதிபதி செயலகத்தால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

## இது ரகசியம் அல்ல!

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க கடும் அடிப்படைவாதி. பௌத்த சிங்களக் கலாசாரத்தின் மீது தீவிர ஈடுபாடு கொண்டவர். இந்த உலகில் அதுவே சிறப்பானது உன்னதமானது என்ற கருத்துக்கொண்டவர். அவரது தீவிரம் எந்தளவிற்கென்றால், கலாசார உடையுடன் காலில் செருப்புக்கூட அணியாமல் நடமாடும் அளவிற்கானது.

அத்தகைய அமைச்சர்தான் வியாழக்கிழமை வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை, தொல்பொருள் திணைக்களத்தின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக அழைத்திருந்தார். அவரது அமைச்சின் கீழ்தான் தொல்பொருள்கள் திணைக்களம் வருகின்றது.

இலங்கையில் தொல்பொருள் திணைக்களம்தான் வரலாற்று ஆய்வுகளை மேற்கொள்கின்றது. அறிவுசார் கற்கைத்துறையான அதனை பௌளத்த

☞ 2

## உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான மனு நேற்று விசாரணைக்கு ஏற்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு உயர் நீதிமன்றத்தின் ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

2023 வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த நிதியை, உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்காகப் பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கான அனுமதியை வழங்கி கடந்த மார்ச் மாதம் 3ஆம் திகதி உயர் நீதிமன்றத்தினால் நிதியமைச்சின் செயலாளருக்கும் நிதியமைச்சர் சார்பில் சட்டமா அதிபருக்கும் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக வரவு, செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்குமாறு வலியுறுத்தி இந்த

☞ 2

## ரஹீம் எம்பியை பதவி விலக கோர நாடாளுமன்றத் தெரிவுக் குழு முடிவு

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து அலி சப்ரி ரஹீமை இராஜினாமா செய்யுமாறு கோருவதற்கான தீர்மானத்தைக் கொண்டு வருவது தொடர்பில், நாடாளுமன்ற விடயங்கள் தொடர்பான தெரிவுக்குழுவில் தீவிரமாக ஆராயப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற விடயங்கள் தொடர்பான தெரிவுக்குழுக் கூட்டம் நேற்று மாலையில் நடைபெற்றபோது அதில் பங்கேற்ற நாடாளுமன்றத்தில் அங்கத்தவம் வகிக் கும் அரசியல், கட்சித் தலைவர்களால் மேற்படி யோசனை முன்வைக்கப்பட்டது.

அதற்கமைய, எதிர்க்கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் இணக்கப்பாட்டிற்கு அமைய, அலி சப்ரி ரஹீமை சுய விருப்பத்தின் பேரில் விலகிச்செல்லுமாறு முன்வைக்கப்பட்ட யோசனை முன்மொழியப்பட்டது. இதனை எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வழிமொழிந்தார்.

மேலதிக நடவடிக்கைகளை சபாநாயகரின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுப்பதென இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இக்கூட்டம் சம்பந்தமாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிக்கையில், தற்போதுள்ள நடைமுறைகளுக்கு அமைய, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை பதவி நீக்கம் செய்ய முடியாது என்பதால், குறித்த நாடாளுமன்ற உறுப்பினரை சுயமாகவே பதவி விலகக் கோரும் தீர்மானத்தினை எடுத்துள்ளோம்' என்றார்.

அலி சப்ரி

☞ 2

## அலி சப்ரி ரஹீம் தங்கம் வாங்க டொலர் எப்படிக் கிடைத்தது?

### கேட்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தங்கத்தைக் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்திய அந்நியச்செலாவணி தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழு உறுப்பினர் நளின் ஹேவகே வலியுறுத்தினார்.

காலியில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் இதனை வலியுறுத்தினார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும் தரப்பிற்கு ஆதரவாகச் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தங்கத்தினையும், திறன்பேசிகளையும் கொண்டு வந்திருந்தார். அதன் மதிப்பு 78.2 மில்லியன் ரூபாய் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதுடன் குறித்த உறுப்பினர் 75 இலட்சம் ரூபாவினை தண்டப் பணமாகவும் செலுத்தி வெளியேறியுள்ளார்.

இந்த இடத்தில் பல கேள்விகள் இருந்தாலும் முக்கியமான

☞ 2

# இனப் பிரச்சினையை தீர்ப்பதில் சஜித் உறுதியோடு இருக்கிறார்

### தன்னோடான சந்திப்புக் குறித்து சம்பந்தன் கருத்து



இனங்களுக்கு இடையிலான பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச உறுதியுடன் இருக்கிறார். நாட்டில் சமாதானமும் பொருளாதார மீட்சியும் ஏற்படவேண்டுமெனில் விரைந்து அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை அவரிடம் வலியுறுத்தியிருக்கின்றேன்.

இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவரும் நாடாளுமன்றக் குழுவின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சஜித் பிரேமசதாசவுடன் நேற்று மாலை 5.30 மணி முதல் இரவு 7 மணிவரையில் நடைபெற்ற திடீர் சந்திப்பு தொடர்பில் காலைக்கதிருக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

☞ 2

## பெறுமதி சேர் வரி அறவிடாமல் மீன் ஏற்றுமதி இடம்பெறாது

### அமைச்சர் விளக்கம்

கொழும்பு, மே 27

துறைமுகத்தில் 35 சதவீதம் பெறுமதி சேர் வரி அறவிப்படாமல் எந்தப் பொருட்களும் மீன் ஏற்றுமதி செய்யப்படமாட்டாதென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச துறைமுகத்தின் ஊடாக மீன் ஏற்றுமதியின்போது முறையான பெறுமதி சேர் வரி அறவிடப்படுவதில்லையென்று முன்வைத்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்

☞ 2

### முறையற்ற மீன் ஏற்றுமதிகளால்

## இந்தியா - இலங்கை இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஆபத்தில்

### சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டு

முறையற்ற மீன் ஏற்றுமதியால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கறுப்பு பட்டியலுக்குள் தள்ளப்படும் நிலை காணப்படுகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை - இந்திய சுதந்திர ஒப்பந்தத்துக்கு அமைய இலங்கையில்

☞ 2

## ஜப்பானின் புதிய முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு

முதலீட்டாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையிலான பல்வேறு ஏற்பாடுகளை இலங்கை அண்மைக் காலங்களில் மேற்கொண்டுள்ள நிலையில் புதிய முதலீட்டாளர்கள் வருகை தர வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

'இலங்கை பொருளாதாரத்தின் மீள் கட்டமைப்பு மற்றும் ஜப்பான் தொழில் வாய்ப்புக்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ் டோக்கியோ நகரில் நேற்று இடம்பெற்ற வர்த்தக வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மற்றும் ஜப்பானுக்கிடையிலான வர்த்தக தொடர்புகளை பலப்படுத்தும் நோக்கில்

☞ 2



## வியட்நாம் பிரதமருடன் ரணில் பேச்சு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வியட்நாம் பிரதிப் பிரதமர் ட்ரான் லூ குவாங் ஆகியோர் நேற்று ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் சந்தித்துப் பேசினர்..

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவது தொடர்பில் இந்தப் பேச்சிலல் ஆராயப்பட்டதோடு, கலாசார தொடர்புகளை

☞ 2

## சந்தேகம்

தற்போதைய ஆட்சியும் சினோபெக் நிறுவனமும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதில் சந்தேகம் இருப்பததாக ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளார் ஆனந்த பாலித்த கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சினோபெக் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதற்கு

☞ 2

## ஜெரோம் போதகரைவிடவும் மோசமான பிக்குகள் பௌத்தத்தை அழிக்கிறார்கள்

### ஓமல்பே சோபித தேரர் குற்றச்சாட்டு

பௌத்தத்திற்கு அழிவை ஏற்படுத்தும் வகையில் காவி அணிந்தவர்கள் ஜெரோம் பெர்னாண்டோவை விடவும் மோசமானவர்கள் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய போதிராஜராமய விகாரையில் நேற்று நடைபெற்ற சமய நிகழ்வுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மதங்களை நிந்தித்தமைக்காக ஜெரோம் பெர்னாண்டோவுக்கு தண்டனை வழங்கப்படவேண்டும். அதனை கட்டாயம் செய்ய வேண்டும். இதனைவிட காவி அணிந்து மதத்தை அழிக்கும் நபர்கள் பௌத்த சமயத்திற்குள்ளும் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் சம்பந்தமாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை.

தலதா மாளிகையின் நிதி சம்பந்தமாக புத்தகம் ஒன்று எழுதப்பட்டுள்ளது. அதில் அங்கு நிதி கையாளும் விதம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த விடயம் தொடர்பாக மாநாயக்க தேரர்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளனர்?. அவர்களுக்கு இது பற்றித் தெரியுமா? குற்றவாளிகளுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது? இவை பௌத்த மத்திற்கு பொருத்தமற்றவை. இவை பற்றிப்

☞ 2

## மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக நேற்று ஆரப்பாட்டம்

### அதன் உறுப்பினர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடந்தது

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களான களுபஹன பியரத்ன தேரர், நிமல் கருணாசிறி மற்றும் விஜித நாணயக்கார ஆகியோருக்கு எதிராக ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களும் இணைந்து நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது..

இலங்கையில் ஆணைக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு எதிராக அதன் அங்கத்தவர்களாலேயே முன்னெடுக்கப்படும் முதலாவது ஆர்ப்பாட்டம் இதுவாகும்.

ஆணைக்குழுவிற்கு முன்னால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரிகள் அமைதியான முறையில் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மனித உரிமைகள் தொடர்பில் புரிதல் இல்லாது மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் குறித்த ஆணையாளர்கள் மூவரும் நடந்து கொள்கின்றனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

அதுமட்டமன்றி குறித்த மூவரும் ஆணைக்குழுவின் அபிமானத்தை இழக்கச் செய்கின்றனர் எனவும் அவர்கள் விமர்சனம் தெரிவித்தோடு

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கலாசார அமைச்சீன் கீழ் கொண்டு சென்று வைத்திருப்பதன் அடிப்படையே அதன் நோக்கங்களைத் தெளிவாக்கும். அண்மையில் அந்தத் திணைக்களத்தின் இலச்சினை பௌத்த அடையாளத்தை மட்டுமே குறிக்கின்றது, அதில் இலங்கையின் ஏனைய மதங்கள், இனங்களுக்கு எந்த இடமும் இல்லைஎன்கிறசர்ச்சைசமூக ஊடகங்களில் வெடித்தது.

பல்லினபலமதஅடையாளங்களை வெளிப்படுத்தும் வகையில்அதன் இலச்சினை மட்டுமல்ல திணைக்களமும் கூட வடிவமைக்கப்படவில்லை.எனினும்எந்தவொரு தொல்பொருள் இடத்தையும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் தன்வசப்படுத்திக் கொள்ளும் அதியுச்ச அதிகாரம் அந்தத் திணைக்களத்திற்குஇருக்கின்றது. அதனைப் பயன்படுத்தித்தான் தமிழர் பகுதிகளில் அந்தத் திணைக்களம் தொடர்ந்தும் பிரச்சினைகளைஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. வடக்குகிழக்கில் அந்தத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் பல திட்டங்களுக்கும் பிக்குகளே நிதி உதவி வழங்குகின்றார்கள் என்பதை அண்மையில் ஜனாதிபதியின் முன்பாகவே திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான பேராசிரியர் ஒப்புக்கொண்டார்.

அப்படிச்செய்ய முடியாது என்று அந்த இடத்திலேயே ஜனாதிபதி கண்டித்து, அறிவுரை சொன்னாராயினும் செய்யவே கூடாது என்று எந்தத்தடைஉத்தரவும்போடவில்லை என்பதையும் கவனிக்கவேண்டும். அப்படிப்பட்ட தொல்பொருள்திணைக்களத்திற்கும் தமிழர்களுக்கும் இடையில் வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள உரசல்கள், பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காகவே அமைச்சரால் இந்தக்கூட்டம்அழைக்கப்பட்டிருந்தது.

கூட்டம்என்றால்முறைப்படியான கூட்டம் அல்ல. அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுக்கு நண்பர்என்பதால், இத்தகைய ஒரு கூட்டத்திற்கு வரமுடியுமா என்று அமைச்சர் தொலைபேசியில் அவரிடம் வினவினார். அவரும் உடனடியாக ஏற்பாடுசெய்யலாம் என்று தெரிவித்தார். செவ்வாய்க் கிழமை சந்திப்புக்கு அழைப்புவிடுக்கப்பட்டது. வியாழக்கிழமைசந்திப்புஎனத்தீர்மானிக்கப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகக் கூட்டணி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விக்னேஸ்வரன், கஜேந்திரன் ஆகியோருக்கும்சாள்ஸ்நிர்மலநாதன் தகவல் தெரிவித்தார். எனினும் அன்றையதினம் அவர்களில் 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே சந்திப்புக்கு வந்திருந்தனர். சிறீதரன், ஜனா, கலையரசன் ஆகியோருடன் சாள்ஸ் நிர்மலநாதனும் ஈபிடிபி உறுப்பினர் திலீபனும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். இதில் திலீபனை அமைச்சர் அழைத்திருக்கக்கூடும்என்று கருதப்படுகின்றது.

வவுனியாவில் உள்ள ஒரு விகாரையில் சிங்கள மக்கள்வழிபடச்செல்வதற்கு அங்குள்ள பிக்கு அனுமதிக்கிறார் இல்லை என்கிற ஒரு பெரும்பிரச்சினையை அங்கு எடுத்துக்கூறியநாடாளுமன்ற உறுப்பினர் திலீபன், அதற்குத் தீர்வுவழங்கவேண்டும்என்று அமைச்சரிடம் விநயமாகக் கேட்டுக்கொண்டாராம். நல்ல விடயம். அந்த மக்கள் அவருக்கு வாக்களித்திருப்பார்களாக்கும். அதனால் அவர்களின்பிரச்சினையையும் பார்க்கத்தானே வேண்டும்.

சொல்லவந்த விடயம் அதுவல்லஎன்பதால்அதனை விட்டுவிடலாம், இத்தகைய இறுக்கமானபௌத்தசிங்களச் சூழலுக்குள் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பற்றி அமைச்சருக்கும் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளருக்கும் வகுப்பெடுக்கப்பட்டதுதான் "கைலைட்". சந்திப்பின் ஒரு கட்டத்தில் தொல்லியல் இடங்களுக்கும் பொருள்களுக்கும் தமிழர்கள் சேதம் விளைவிப்பதால்தான் தாங்கள் அவை குறித்து அதிகம் அக்கறைப்பட வேண்டியிருக்கிறது, அதனால்தான் அந்த இடங்களை அளவை செய்து, தமக்குரியதாக்கிப் பாதுகாக்கவேண்டி யிருக்கின்றது என்கிற சாரப்பட திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த தமிழ் எம்.பிக்கள், வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் இருக்கும்இந்த இடங்களைப் பாதுகாத்து வைத்திருப்பது நீங்கள் இல்லை. அவற்றைப் பாதுகாத்துவைத்திருந்தவர்கள் விடுதலைப் புலிகள்தான். அவர்கள் நினைத்திருந்தால் இந்த தொல்லியல் அடையாளங்களை எல்லாம் 'அதுவும் பௌத்தத்துக்குரியது என்ற அடையாளங்களைஎல்லாம்' கிண்டிக்கிளறி இருந்த இடமே தெரியாமல் அழித்திருக்க முடியும். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் செய்ததைப் போன்றுஇங்கும்செய்வதற்கு அவர்களுக்கு அதிக காலம் பிடித்திருக்காது. விகாரைகள் இருந்த இடங்களில் ஒரு போதும் அகற்ற முடியாத வகையிலான வேறு முக்கிய கட்டமானங்களை ஏற் படுத்தியிருக்க முடியும் 'நீங்கள் இப்போது மாவீரர் துயிலும் இல்லங்களில் படைமுகாம்கள்அமைத்திருப்பதைப் போன்று' ஆனால், அவர்கள் அப்படிச்செய்யவில்லை. அந்த இடங்களை எல்லாம் போர்க் காலத்திலும்கூட அப்படியே பாதுகாத்தவர்கள் புலிகள் தான். அந்த இடங்களை மக்கள் ஆக்கிரமிப்பதற்குக்கூட அவர்கள் அனுமதித்த தில்லை. அவர்கள் பாதுகாத்த வற்றைத்தான் இப்போது நீங்கள் வந்து உங்களுடையதுஎன்றுஉரிமைகோருகின்றீர்கள். போதாததற்கு தமிழ் மக்கள் அவற்றைச் சேதப்படுத்துகிறார்கள் என்று வேறு கூறுகின்றீர்கள் என்று ஒரு பிடி பிடித்திருக்கிறார்கள்.

அமைச்சரும் பணிப்பாளரும்தலையைக்குனிந்து கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார்களாம்.

- இடிமின்னல் -

## இனப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடனான சந்திப்புமிகவும்சுமூகமாகவும் ஆரோக்கியமானதாகவும் அமைந்திருந்தது. அவருடன் சமகால அரசியல் நிலைமைகள்உட்படபல்வேறு விடயங்கள் சம்பந்தமாக உரையாடக்கிடைத்தது.

விசேடமாக தமிழ் மக்களின்அபிலாஷைகள்தொடர்பில் அவரது கவனத்திற்கு எடுத்துச் சென்றதோடு, ஏனையஅன்றாடப்பிரச்சினைகள் சம்பந்தமாகவும் எடுத்துரைத்தேன்.

அதன்போது, இனங்களுக்கு இடையில் சமத்துமான நிலைமைகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதில் தான் உறுதியாக உள்ளார் எனக் குறிப்பிட்டார். அதுமட்டுமன்றி இனங்களுக்கு இடையில் நிரந்தரமான சமதானத்தினையும், அமைதியையும் நிலைநாட்டுவதில் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவார் எனவும் குறிப்பிட்டார்.

இருவரும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்தும் பேசினோம். பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலும் பேசினோம். அரசியல் தீர்வு குறித்தும் முக்கிய கவனம் செலுத்திப் பேசினோம்.

நாட்டில்சமாதானம், சமத்துவம்நிலவவேண்டுமெனில் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமெனில் நிலையான - நிரந்தர அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும் என்று சஜித் பிரேமதாஸவிடம் எடுத்துரைத்தேன். அதை அவர் ஏற்றுக்கொண்டார். - என்றார்.

## உள்ளூராட்சித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது, மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கவனத்திற்கொண்டுஇதனைஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் வழக்குடன் தொடர்புடைய அறிவித்தல் உரிய முறையில் கிடைக்கவில்லையென தெரிவித்து வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நகர்த்தல் பத்திரம் ஊடாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

நகர்த்தல் பத்திரம் தொடர்பான விடயங்களை உறுதிப்படுத்துவதற்கும்அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காகவும் மனு மீதான விசாரணை அடுத்த ஜூன் 9 வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## அலி சப்ரி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விடயம் ஒன்றுண்டு, குறித்த தங்கத்தையும், தொலைபேசிகளையும் கொள்வனவு செய்வதற்கு அவரிடத்தில் எவ்வாறு வெளிநாட்டு நாணயம் (டொலர்) வந்தது?

அவர் எவ்வாறு வெளிநாட்டுநாணயத்தினை இலங்கையில் இருந்து எடுத்துச் சென்றார்? அவ்வாறு இல்லாது விட்டால் அவருக்கான வெளிநாட்டு நாணயம் எவ்வாறு செலுத்தப்பட்டது?

இந்த விடயங்கள் சம் பந்தமாக முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும். ஏனென்றால் நாடு அந்நியச் செலாவணியின்றி இருக்கை யில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வாறு அந்நிய நாணயம் கையிலிருப்பில் உள்ளதென்பது மிகப்பெரும் கேள்வி - என்றார்.

## ரஹீம் எம்பியை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ரஹீமை மூன்றரைக் கிலோ தங்கம் மற்றும்அதிறன்பேசிகள் (ஸ்மார்ட்போன்) ஆகியவற்றை துபா யிலிருந்து விருந்தினர் முனையத்தின் ஊடாகக் கடத்தி வந்தபோது சுங்க அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டார். 75 லட்சம் ரூபாய் அபராதம் செலுத்திய பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.

## பெறுமதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவித்த தாவது:

துறைமுகத்தின் ஊடாக மீன் ஏற்றுமதி செய்யப்படும் சகல தேசிய உற்பத்திகளுக்கும் 35 சதவீத பெறுமதி சேர் வரி அறவிடப்படும். இந்த வரிக் கொள்கை முறையாக செயற்படுத்தப்படுகிறது. எதிர்க்கட்சித்தலைவர் முன்வைத்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி உரிய தகவல்கள் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

மீன் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஏற்றுமதிக் கட்டமைப்பில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் உரிய தரப்புக்களுடன் பேச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார்.

## இந்தியா - ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இருந்துஇந்தியசந்தைகளுக்கு சுமார் 4000 பொருட்கள் ஏற்றுமதி செய் யப்படுகின்றன. இதனூடாகத்தேசிய உற்பத்தியாளர்கள்பயனடைகிறார்கள்.

இந்தோனேஷியாவில் இருந்து உலர்ந்த பாக்கு இறக்குமதி செய்யப்பட்டு, அவை இலங்கை ஊடாக இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தமீள் ஏற்றுமதியின் போது பெறுமதி சேர்வரி ஊடான வருமானம் முறையாக கிடைக்கப் பெறுகிறதா என்கிற சந்தேகம் ஏற்பட்டுள்ளது..

மீன் ஏற்றுமதி நடவடிக்கையின் போது இடம்பெறும் முறைகேடுகளினால் தேசிய உற்பத்தி ஏற்றுமதியாளர்களும், முறையான ஏற்றுமதி நடவடிக்கையில் ஈடுபடுபவர்களும் பாதிக்கப்படுவார்கள். இவ்வாறான செயற்பாடுகளினால்இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கறுப்பு பட்டியலில் சேரும் ஆபத்துக் காணப்படுகிறது.

மீன் ஏற்றுமதிக்காக துறைமுகத்தில் தேங்கியுள்ள 39 கொள்கலன்களை இறக்குமதிசெய்ததுயார்? இந்த மீன் ஏற்றுமதி ஊடாக முறையான பெறுமதி சேர் வரி கிடைக்கப் பெறுகிறதா? என்றார்.

## ஜப்பானின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜப்பானிலுள்ள இலங்கை வர்த்தக சம்மேளனம் (JETRO) மற்றும் இலங்கை தூதரகம் ஆகியன இணைந்து மேற்படி மாநாட்டினை ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது, இலங்கையிலுள்ள புதிய முதலீடுகளுக்கான வாய்ப்புகள் தொடர்பில் தெளிவுபடுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் திறந்துவிடும் நடவடிக்கைகளை முன்னெடுக்க மேற்கொள்ளப்பட்டுள்ளநடவடிக்கைகள், புதிய வெளிநாட்டு வர்த்தகங்களை ஈர்ப்பதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது - என்றார்.

வர்த்தகச்செயற்பாடுகளில் இலங்கைக்கு அத்தியாவசியமான நட்பு நாடாக ஜப்பான் விளங்குவதாகவும், இருநாட்டு உறவுகளையும் பலப்படுத்திக்கொள்வதால் பல்வேறு பயன்களை கிட்டும் என்றும் தெரிவித்தார்.

## வியட்நாம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பலப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இச்சமயத்தில், இரு நாடுகளும் பரஸ்பர செயற்பாடுகளை எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கான இணக்கம் காணப்பட்டதோடு, வியட்நாமின் கடந்த காலம் தொடர்பிலும் ஜனாதிபதி நினைவு கூர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சந்தே .....


(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முன்னதாக ஏனைய இரண்டு நிறுவனங்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டதாக அமைச்சர் காஞ்சன குறிப்பிட்டார்.

அவர் குறித்த இரண்டு நிறுவனங்களையும் சினோபெக் நிறுவனம் போன்றே வெளிப்படைத்தன்மையுடன் தெரிவு செய்ததாகத் தெரிவித்தார். ஆனால் தற்போது அந்த நிறுவனங்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியாதுள்ளது.

மூன்று நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் அறிவித்தபோதும் ஒரு நிறுவனம் விலகியுள்ளதாக கடந்தவாரம் அறிவித்துவிட்டு சீன நிறுவனத்துடன் மாத்திரம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சரின் இந்தச் செயற்பாடு சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது. சினோபெக் நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம்கூட இன்னமும் மர்மமாகவே உள்ளது - என்றார்.

# யாழ். நகர உணவகத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் தண்டம்





யாழ்ப்பாணம், மே 27

யாழ். நகரில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகம் ஒன்றுக்கு நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது.

யாழ். மாநகர பொது சுகாதார பரிசோதகர்களினால் மாதாந்தம் உணவகங்கள், பலசரக்கு கடைகள் என்பன பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கடந்த 10ம்திகதிய பரிசோதனையில் கஸ்தூரியார்வீதியில்பல்வேறு சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகம் யாழ்நகர் பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனினால் இனங்காணப்பட்டது.

இதனையடுத்துஉணவக உரிமையாளரிற்கு எதிராக மே 11 மேலதிக நீதிவான் மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கினை விசாரணை செய்த நீதிமன்றம் உணவகத்தினை சீர் செய்யும்வரை சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டது.

மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு நேற்று விசாரணைக்கு மீண்டும் எடுத்து கொள்ளப்பட் போது பொது சுகாதார பரிசோதகரால் உணவக உரிமையாளரிற்கு எதிராக 10 குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அனைத்து குற்றச்சாட்டுகளிற்கும் உணவக உரிமையாளரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் 50,000/= தண்டம் விதித்தது. அத்துடன் இனங்காணப்பட்ட குறைபாடுகள் அனைத்தும் நிவர்த்திசெய்யப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதையடுத்து உணவகத்தினை மீள திறப்பதற்கான அனுமதியையும் நீதிமன்றம் வழங்கியது.

## மனித .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இவர்கள்முன்னாள்ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள்.

ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக இந்த மூவரும்அண்மையில்விமர்சனங்களை முன்வைத்திருந்தனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் உயர் பதவியைப் பெறுவதற்காக நாட்டுக் குப் பொருத்தமில்லாத விடயங்களை ஆணைக் குழுவின் தலைவி பேசி வருகின்றார் என்று அவர்கள் விமர்சித்திருந்தனர்.

இந்தப் பின்னணியிலேயே நேற்றைய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

## ஜெரோம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தேடுவதில்லை. ஆராய்வதில்லை. விசாரணைக்கு உட்படுத்துவதில்லை. இது தொடர்பில் மாநாயக்க தேரர்கள் எடுத்த முடிவுகள் என்ன?

ஜெரோம் பெர்னாண்டோவினால் ஏற்படும் அழிவுகளை விட காவி அணிந்துக்கொண்டு பௌத்த மதத்திற்குள் இருப்போர் பெரும் அழிவுகளை ஏற்படுத்துகின்றனர். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் பௌத்தத்தின் எதிர்காலம் மிகவும் மோசமானதாக அமைந்துவிடும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622









காலைக்கதிர் Kalaikkathir

## தினேஷ் ஷாப்டரின் சடலம் மீதான தடயவியல் சோதனை முன்னெடுப்பு

கொழும்பு, மே 27

வர்த்தகர் தினேஷ் ஷாப் டரின் சடலம் மீதான தடயவியல் பிரேத பரிசோதனை கராபிட்டி போதனா வைத்தியசாலையில் இடம்பெறுகிறது.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் தடயவியல் மருத்துவ பேராசிரியர் அசேல மெண்டிஸின் தலைமையில் இந்த பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் தமது காரில் கைகள் மற்றும் வாய் ஆகியனகட்டப்பட்டநிலையில், பொரளை மயானத்திற்கு அருகில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இவரின் உயிரிழப்பு கொலையா? அல்லது தமது உயிரை மாய்த்துக்கொள்ள முற்பட்டாரா? என்பது தொடர்பில் இதுவரை உரிய தகவல்கள் வெளியாகாத நிலையில், அவரது மரணத்தில் தொடர்ந்தும் மர்மம் நீடிக்கின்றது.

இதேவேளை நீதவான், நிபுணர்கள் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளின் முன்னிலையில், வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## இறக்குமதி கட்டுப்பாடுகள் விரைவில் தளர்த்தப்படும்

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

எதிர்காலத்தில் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட கருத்து தெரிவிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 70 வீதம் ஆக இருந்த பணவீக்கம் இப்போது 30 வீதத்தை எட்டியுள்ளது, நான்காவது காலாண்டில் பணவீக்கம் ஒற்றை இலக்கத்தை எட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மூலதனப் பரிவர்த்தனைகளுக்கான கட்டுப்பாடுகளை முறையாகத் தளர்த்துவோம் என்றும் இவை இரண்டும் வணிக நடவடிக்கைகளை அதிகரிக்க உதவும். என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

## ஆட்சி நிர்வாக வலுவாக்கம், ஊழல் மோசடி ஒழிப்பு ஆகியவற்றுக்கான மறுசீரமைப்பு நாட்டில் தேவை

### அமெரிக்கத் தூதுவர் ஜூலி வலியுறுத்து



இலங்கையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும், சாதகமான வணிகச்சூழலைக் கட்டியெழுப்புவதற்கும் ஏதுவான கொள்கை உருவாக்கத்துக்கான உத்வேகத்தை அமெரிக்க வர்த்தகப்பேரவை வழங்கியிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், சிறந்த ஆட்சி நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும் ஊழல் மோசடிகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் மேலும் பல்வேறு மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிறுவப்பட்டுள்ள அமெரிக்க வர்த்தகப்பேரவையின் வருடாந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

இவ்வருடம் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இருதரப்புத்தொடர்புகள் ஆரம்பமாகி 75 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன.

இவ்வேளையில் அமெரிக்காவும் இலங்கையில் இயங்கிவரும் அமெரிக்க வர்த்தகப்பேரவையும் இலங்கை பொருளாதாரத்தின்மீதுஏற்படுத்தியுள்ள நேர்மறையான தாக்கம் தொடர்பில் நினைவுகூர விரும்புகின்றேன்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நல்லுறவு மக்கள், வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்பு ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நீண்டகால வரலாற்றைக் கொண்டிருக்கின்றது.

எமது இருநாடுகளும் சுமார் 7 தசாப்தகாலமாகப் பொருளாதார அபிவிருத்தி முதல் தேசிய பாதுகாப்பு வரைபல்வேறுவிடயங்கள்தொடர்பில் மிகவும் விரிவாக ஒன்றிணைந்து பணியாற்றிவந்திருப்பதுடன் இருநாடுகளுக்கும் இடையில் வலுவான நட்புறவும் பரஸ்பர நன்மதிப்பும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

அதேவேளை வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்குவித்ததன் மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதில் அமெரிக்க வர்த்தகப்பேரவையும் முக்கிய பங்காற்றியுள்ளது.

குறிப்பாக சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்ட அமெரிக்க வர்த்தகப்பேரவை, இலங்கையில் அமெரிக்க தனியார்துறை முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தல் ஆகியவற்றைப் பிரதான நோக்கங்களாகக்கொண்டு இயங்கிவருகின்றது. அதன்படி கலந்துரையாடல்கள், ஆலோசனை வழங்கல்கள் மற்றும் கொள்கை உருவாக்கம் ஆகியவற்றின் ஊடாக இலங்கையின் வளர்ச்சிக்கு அமெரிக்க வர்த்தகப்பேரவை உதவிகளை வழங்கியுள்ளது.

குறிப்பாக இலங்கையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும், சாதகமான வணிகச்சூழலைக் கட்டியெழுப்புவதற்கும் ஏதுவான கொள்கைகளை உருவாக்குவதற்கான உத்வேகத்தையும்தற்போதுஇலங்கை அரசாங்கம் முன்னெடுத்துவரும் மறுசீரமைப்புக்கள் தொடர்பான ஆலோசனைகளையும் அமெரிக்க வர்த்தகப்பேரவை வழங்கியிருக்கின்றது.

இதனைமுன்னிறுத்தியபணிகள் இன்னமும் நிறைவடையவில்லை. சிறந்த ஆட்சி நிர்வாகத்தை ஊக்குவிப்பதற்கும், ஊழல் மோசடிகளை முடிவுக்குக்கொண்டுவருவதற்கும் மேலும் பல்வேறு விடயங்களைச் செய்யவேண்டியுள்ளது.

ஆனால் தற்போது அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் இலங்கை மற்றும் அமெரிக்க வணிகங்களுக்கான புதிய வாய்ப்புக்கள் உருவாவதற்கும், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீட்சியடைவதற்கும், பொருளாதார வளர்ச்சி ஊக்குவிக்கப்படுவதற்கும் உதவும் என்று குறிப்பிட்டுள்ளார். (05)

## பாடசாலை ஆசிரியர் மீது தாக்குதல்: இதுவரை 22 மாணவர்கள் சிக்கினர்

### இம்முறை நு/ஸி பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள்

புத்தளத்தில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் 17 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 17 மாணவர்களும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில், முன்னதாக 5 மாணவர்கள் கைது செய்யப்பட்டுநாளைவரைவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியர் மாணவர்களது ஒழுக்கம் தொடர்பில் அறிவுறுத்தியுள்ளார்.

இந்தநிலையில், அவரது இல்லத்துக்குக்கடந்தசெவ்வாய்க்கிழமை சென்ற மாணவர்கள், குறித்த ஆசிரியர் மீது தாக்குதலை நடத்தியுள்ளனர்.

பின்னர், காயமடைந்த ஆசிரியர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதையடுத்து பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில், குறித்த சம்பவம் தொடர்பில், இதுவரையில் 22 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (02)






## திஸ்ஸவிதாரணவின் அலுவலக திறப்பை யாரோ எடுத்துச் சென்று விட்டார்களாம்!

கொழும்பு, மே 27

கொழும்பு யூனியன் பிளேஸில் உள்ள தனது அலுவலகத்தின் திறப்பை ஒருவர் எடுத்துச் சென்றதால் அந்த அலுவலகத்துக்குள் தன்னால் செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை கேள்வி எழுப்பியபோது தெரிவித்தார்.

கொழும்பின் யூனியன் பிளேஸில் உள்ள அந்த அலுவலகத்திலிருந்து தான் தனது அனைத்து வேலைகளையும் செய்வதாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சிறப்புரிமை தொடர்பில் குறிப்பிட்ட பேராசிரியர் திஸ்ஸ விதாரண, இதனால் அந்த அலுவலகத்தில் உள்ள பொருள்களும் இல்லாமலாகலாம் எனவும், இந்த நிலைமையை நாடாளுமன்ற சிறப்புரிமைகள் குழுவிடம் சமர்ப்பித்து தீர்வொன்றை பெற்றுத் தருமாறும் கோருவதாகவும் தெரிவித்துள்ளார். (05)

## 16 பாடசாலை மாணவிகள் துஷ்பிரயோகம்: கைதான ஆசிரியருக்கு தொடர்ந்து மறியல்

களுத்துறையில் சுமார் 16 பாடசாலை மாணவிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் எனக் கூறப்படும் தனியார் வகுப்பு ஆசிரியரை எதிர் வரும் 9ஆம் திகதி வரை மீளவும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர் நேற்று களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் 16 பாடசாலை மாணவிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் எனக் கூறப்படும் தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவர் களுத்துறை சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோகத் தடுப்புப் பணியகத்தால் கடந்த 11ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

களுத்துறை வடக்கு பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய குறித்த ஆசிரியரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது, இன்று வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

களுத்துறை வடக்கு - காலி வீதியில் தனியார் வகுப்புகளை நடத்தும்சந்தேகநபரானஆசிரியர், மாணவிகளைத் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது கணவரின் மடிக்கணினியைப் பரிசோதித்த போது அதில் மாணவிகள் துஷ்பிரயோகம் செய்யப்படும் காணொளிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது என்று சந்தேகநபரான ஆசிரியரின் மனைவி சம்பந்தப்பட்ட மாணவிகளில் சிலரின் பெற்றோருக்கு அறிவித்திருந்தார்.

இதையடுத்து, குறித்த பெற்றோர்கள் மூலமாக களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, தலைமறைவாகியிருந்த சந்தேகநபரான ஆசிரியர் கைது செய்யப்பட்டிருந்தார். (02)

## ஒஸ்மானியாக் கல்லூரியின் மோதல் விவகாரம்: பொலீஸ் நடவழக்கைக்குட்படுத்தி விசாரணை



யாழ்ப்பாணம்ஒஸ்மானியாக் கல்லூரியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பயிற்சி ஆசிரியர் மற்றும்மாணவர்கள் இடையே இடம் பெற்ற மோதல் அசம்பாவிதம் தொடர்பாக பாடசாலை நிர்வாகத்துக்கும் - யாழ்ப்பாணம் வலயக் கல்வி பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன் தலைமையிலான குழுவினருக்கும்இடையில்விசேட கலந்துரையாடல் ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் அலுவலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில், இடம் பெற்ற ஆசிரியர் மற்றும் மாணவர்கள் இடையேயான இரு தரப்பு மோதல்கள் தொடர் பில் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு அமைவாக ஆசிரியர் மற்றும் பாடசாலை இரு தரப்பினரையும் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை பதிவு செய்யுமாறும், வலயக்கல்வி அலுவலகத்தால் மாகாண சிறுவர் நன்னடத்தைதிணைக்களத்துக்கு இது தொடர்பில் எழுத்து மூலம் அறிவிக்கப்படும் என்றும், மேற்படி பொலிஸார் மற்றும் மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களம் இணைந்து உரிய சட்ட விசாரணைகளை முன்னெடுத்து முறையான தீர்மானம் ஒன்றை நீதிமன்றிற்கு ஊடாக முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

அந்த வகையில் மோதலுடன் தொடர்புடைய பயிற்சி ஆசிரியர் அவர் தரப்பிலும், பாடசாலை சார்பில் அதிபர் தரப்பிலும் பொலிஸில் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேநேரம் ஆசிரியர்களிலும் ஒருசிலர்தமதுசொந்தவிருப்பத்தில் இடமாற்றத்தை கோரி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமானகடிதம்ஒன்றும்வழங்கி வைக்கப்பட்டது. இது தொடர்பில் தான் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக வலயக் கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் ஆசிரியர்கள் தொடர்பானஒருசிலவிவகாரங்கள்தொடர்பிலும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு பணிப்பாளரின்கவனத்திற்குகொண்டுவந்தது. இது தொடர்பில் தனக்கு எழுத்து மூலம் அறிக்கை சமர்பிக்குமாறு பணிப்பாளர் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இளையவர் கையில் ஒப்படையுங்கள்

தமிழ் அரசுக் கட்சிக்கு யார் புதிய தலைவர் என்கிற கேள்வி எழுந்துள்ள நிலையில் அனைவரும் ஏகமனதாகத் தன்னைத் தெரிவு செய்தால் அந்தப் பதவியை ஏற்றுக் கட்சியை வழிநடத்துவதற்குத் தான் தயாராக உள்ளார் என்று கட்சியின் மூத்த தலைவரான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். பதவியின் மீது தனக்கு ஆசையில்லை என்பதைத் தெரிவித்துள்ள அவர், கட்சியின் தேவை கருதிப் பதவியை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கட்சியைத் தலைமை தாங்குவதற்கு அவர் பொருத்தமான நபர்தான். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அரச நிர்வாகத்தில் ஆளுமை மிக்கவரான அவர், கட்சியிலும் மிக நீண்டகால உறுப்பினர். கட்சியின் வரலாறு, பாரம்பரியம், வழித் தடம் தெரிந்தவர். கட்சியின் உள், வெளி முரண்பாடுகள் என்று சகலதும் அறிந்தவர். பல சமயங்களில் அவற்றைத் தீர்ப்பதற்கான நடுநாயகமாகவும் விளங்கியவர். கட்சியின் மேல் மட்டத் தலைவர்களுக்குள் முரண்பாடுகள் ஏற்பட்ட பல சமயங்களில் அவர்களிடையே சமரசங்களைச் செய்வதில் அவர் ஆற்றிய பணிகளும் அளப்பரியன. அப்படிப்பட்ட ஒருவர் கட்சித் தலைவர் ஆவது பொருத்தமானதுதான். அவர் சொல்வதைப் போன்று ஏகமனதானதாக அவரது தெரிவு அமைந்தால், தற்போது பிரிவுகள், பிளவுகளால் சிதைந்து கிடக்கும் கட்சியை மீள ஒருங்கிணைத்துப் பலம் மிக்கதாக்கும் வல்லமையும் அவருக்குண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

இருந்தாலும் அவர் கட்சித் தலைவர் பதவியை ஏற்பதற்கு உள்ள ஒரே தடை அவரது வயது. அந்த வயதுக்கேற்ற அறிவும் அனுபவமும் அவரது பெரும் பலம் என்கிறபோதும், கட்சியும் தமிழர்களின் அரசியலும் ஓர் மிக முக்கிய கட்டத்தினுள் சிக்கிக் கொண்டிருக்கும்போது அதனை புதிய சவால்களுக்கு ஏற்றவிதத்தில் தலைமை தாங்கி நீண்ட தூரம் – காலம் – வழிநடத்திச் செல்ல வேண்டிய தேவைக்கு அவரது வயது ஒரு தடை.

இளமையும், துடிப்பும் ஆற்றலும் மிக்க ஓர் தலைவரால் தான் கட்சியையும் தமிழ் மக்களையும் இப்போதைய இக்கட்டிலிருந்து மீட்டெடுத்து வழிநடத்த முடியும் என்பதுடன் எதிர்காலத் தலைமுறைக்கான புதிய அரசியல் பாதையையும் திறக்க முடியும்.

இன்றைய சீன அதிபர் ஜின் பிங் அதற்கொரு சிறந்த உதாரணம். சீனாவும் பொதுவுடமைக் கட்சியும் நாட்டையும் கட்சியையும் இளைஞர்கள் கையில் ஒப்படைப்பது என்கிற முடிவை எடுத்துத்தான் அவரது கையீல் இரண்டையும் ஒப்படைத்தன. அதன் விளைவை இன்று உலகம் முழுவ–தும் காண்கிறது. அமெரிக்காவே அச்சப்படும் வகையில், அடுத்த வல்லரசு சீனாதான் என்று உலகம் நம்பும் வகையில் அந்த நாட்டைத் தயார்ப்படுத்தி வளர்த்திருக்கிறார் அவர்.

தமிழர்களுக்கும் இப்போது அத்தகைய ஒரு தலைவரே அவசியம். சிவஞானம் உள்ளிட்ட கட்சியயின் மூத்த தலைவர்களின் அனுபவமும் அறிவும் ஆலோசனைகளாச் சேர்ந்திருக்க செயற்றிறன் மிக்க துடிப்புள்ள இளைஞர்களுக்கு இடமளிப்பதன் மூலமே எதிர்கால அரசியல் சவாலை எதிர்கொள்ள முடியும். சிவஞானத்தால் அந்தச் சவாலை எதிர்கொள்ள முடியாத என்றால், முடியும் என்பதுதான் பதில். ஆனால் எவ்வளவு காலத்திற்கு என்கிற கேள்வி இருக்கிறதல்லவா? நீண்ட, நிலைத்திருக்கக் கூடிய தலைமை, இன்றைய அரசியல் களநிலவரத்தில் தமிழர்களுக்கு அவசியமாக இருப்பதால், மூத்த தலைவர்கள் வழிவிட்டு பொருத்தமான இளையவர்கள் தலைமையேற்பதற்கு அனுமதிக்கவேண்டும்.

அதனைச் செய்யும் பெருந்தன்மையும் புரிந்துகொள்ளும் அறிவும் பகுத்தறியும் ஆற்றலும் மிக்கவர் சி.வி.கே. சிவஞானம். அதனால்தான் அவர் தலைவர் பதவிக்குப் போட்டியிடப் போகின்றேன் என்று சொல்லவில்லை. ஏகமனதாக அழைத்தால் பொறுப்பை ஏற்கின்றேன் என்றுதான் சொல்கிறார். இப்போதைய அரசியல் களநிலவரத்தையொட்டி அந்த நிலையிலிருந்தும் முன்னகர்ந்து பொருத்தமான இளம் தலைவரை அடையாளப்படுத்தி, அவரைத் தலைமை நோக்கி நகர்த்தவேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் அவருக்கு இருக்கின்றது. தமிழர்களின் எதிர்கால அரசியல் நலன் கருதி அவர் ஆற்றவேண்டிய வரலாற்றுப் பணி அது.

# நாடளாவிய ரீதியில் பிரசாரத்தில் மக்கள்புரட்சிக்காக ஈடுபடுவேன்

## பொன்சேகா சூளுரை



ஊழல் அரசியல்வாதிகள் மாத்திரமே போராட்டத்தை (அரகலய) கடுமையாகச் சாடுகிறார்கள். போராட்டத்தால் தான் ராஜபக்ஷர்களிடமிருந்து நாடு பாதுகாக்கப்பட்டு பாரிய மாற்றம் அரசமைப்பின் ஊடாக ஏற்பட்டதுஎன்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

ஊழல் அரசியல்வாதிகள் மீண்டும் தலைதூக்கியுள்ளமை கவலைக்குரியது. சிறந்த அரசியல் கலாசாரத்துக்காக மக்கள் புரட்சிதோற்றம்பெறவேண்டும். அதற்காக நாடளாவிய ரீதியில் பிரசாரங்களை முன்னெடுப்பேன்.

பௌத்தத்துக்கு பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் பிரசாரம் செய்வதற்கு சிங்கள மக்கள் ஏமாறக் கூடாது. வரலாற்றில் ஏமாற்றமடைந்தது போதும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிதி ஒழுங்குப்படுத்தல் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு

நாடு பொருளாதார பாதிப்பில் இருந்து மீண்டு விட்டது. அதனால் எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசிய தேவைகளுக்கான வரிசையுகம் முடிவடைந்து விட்டது என அரசாங்கம் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது. மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளைக் குறைத்துக் கொண்டுள்ளார்கள். இதனால் வரிசையுகம் முடிவடைந்துள்ளது. சாதாரண மக்கள் எவரும் சந்தோசமாக இல்லை, பிரச்சினைகளுடன் வாழ்கிறார்கள்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைசடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளதால் நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டின் பொருளாதாரம் நாளாந்த ஒடுக்கப்பட்ட நிலைக்குச் செல்கிறது. பொருளாதாரப் பாதிப்பால் தொழில் இன்மை தீவிரமடைந்துள்ளது. நடுத்தர மக்கள் பெறும் சம்பளத்துக்கும், வாழ்க்கை செலவுக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகிறது.

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மை இல்லாத காரணத்தால் வெளிநாட்டு ஆடை தொழில் முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்.

பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி கருத்துரைக்கிறார். பொருளாதார முன்னேற்றம் மத்திய வங்கி, நிதியமைச்சு ஆகியவற்றை வரையறுத்ததாகக் காணப்படுகிறது. பொருளாதார முன்னேற்றத்தின் பயனை மக்கள் பெறவில்லை.

மின் கட்டணத்தை அதிகரிக்க ஜனக ரத்நாயக்க எதிர்ப்புத் தெரிவித்ததால் அரசாங்கம் அவரை எதிரியாகப் பார்த்தது. அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் மக்களுக்காகக் குரல்கொடுத்த காரணிகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க எமக்கு இணங்க செயற்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிடுகிறார். ஊழல் அரசியல் மீண்டும் தலைதூக்கியுள்ளமை கவலைக்குரியது.

அரசாங்கத்தின் தேவைகளுக்காகவே புதிய சட்டங்களைக் கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் ஆகியவற்றை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது. இவை நாட்டு மக்களுக்கு ஏதாவதொரு வழிமுறையில் பாதிப்பை ஏற்படுத்தும்.

நாட்டில் போராட்டம் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தியது. ஊழல் அரசியல்வாதிகளே போராட்டத்தை (அரகலய) கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

போராட்டத்தின் ஊடாகவே நாட்டில் பாரிய மாற்றம் ஏற்பட்டது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். நாட்டு மக்களை ஏமாற்றி அடுத்த முறை ஆட்சிக்கு நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினர் செயற்படுகிறார். காலி முகத்திடல் தொடர்பில் புத்தகம் எழுதி மக்களைத் தவறாக வழிநடத்த முடியாது. ஊழல் அரசியல்வாதிகளை இல்லாதொழித்து சிறந்த அரசியல் கலாசாரத்துக்காக மக்கள் புரட்சி தோற்றம் பெற வேண்டும். அதற்காக நான் நாடளாவிய ரீதியில் பிரசாரங்களை முன்னெடுப்பேன். என்றார். (05)

# ‘முக்கிய பிரமுகர்கள்’ மேற்கொள்ளும் ஊழல் மோசடிகளின் ஓரங்கம் ரஹீம்



## கரு ஜெயசூரிய அதிருப்தி

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் செயற்பாடு, நாட்டின் முக்கிய பிரமுகர் என அழைக்கப்படும் சில தரப்பினரால் சட்டவிரோதமாக முன்னெடுக்கப்பட்டுவரும் ஊழல்மோசடிகளின் ஒரு பகுதியேயாகும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு -

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரொருவர் 7 கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான மூன்றரை கிலோகிராம் நிறையுடைய தங்க பிஸ்கட்டுகள், ஆபரணங்கள் மற்றும் கையடக்கத்தொலைபேசிகளை சட்ட விரோதமான முறையில் நாட்டுக்குக் கொண்டு வந்தபோது கைதான சம்பவத்தை நாம் மிகவும் பாரதூரமான விடயமாகவே கருதுகின்றோம்.

இது தொடர்பில் விசனமடையும் அதேவேளை, நாடு என்ற ரீதியில் வெட்கப்படவேண்டிய விடயமாகவும் நாம் இதனைக் கருதுகின்றோம்.

‘கௌரவ உறுப்பினர்’ என்று விழிக்கப்படும் ஒருவர் நாட்டின் முதன்மை விமானநிலையத்தின் முக்கிய பிரமுகர்களுக்கான முனையத்தைப் பயன்படுத்திச் செய்திருக்கும் இந்தச் செயலானது, நாட்டின் முக்கிய பிரமுகர் என அழைக்கப்படும் சில தரப்பினரால் சட்டவிரோதமாக முன்னெடுக்கப்பட்டுவரும் ஊழல்மோசடிகளின் ஒரு பகுதி என்றே நாம் நம்புகின்றோம்.

இந்தச் செயலின் விளைவாகக் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒட்டுமொத்த நாடாளுமன்றத்தையும் இழிவுபடுத்தியுள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத்தில் கண்ணியம் மிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம்வகிப்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, இவர்களைப்போன்ற நபர்களின் செயல்களால் கண்ணியம் மிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களும் இழிவுபடுத்தப்படுகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மேலும் இந்தச்செயலைவெறுமனே சுங்கச்சட்டத்தை மீறிய செயலாக மாத்திரம் கருதமுடியாது. இதனூடாக நாட்டின் அந்நியச்செலாவணி சட்டங்களும் மீறப்பட்டுள்ளனவா என்பது குறித்துக் கவனம்செலுத்தவேண்டும். அவ்வாறு மீறப்பட்டிருப்பின், அது பாரிய குற்றமாகும்.

ஆகையால் நாட்டின் பொறுப்புடைய தரப்புக்கள் இது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டிய அதேவேளை, குற்றஞ் சாட்டப்பட்டுள்ள நபரின் தகுதி, தராதரங்களைப் பாராமல் சட்டத்தை உரியவாறு நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (05)

# நாடாளுமன்ற செயலரின் பாராட்டு பிரேரணையில் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் பங்கேற்கவில்லை!

கொழும்பு, மே 27

ஓய்வு பெற்றுச் செல்லும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவுக்கு பாராட்டு தெரிவிக்கும் பிரேரணையில் தமிழ், முஸ்லிம், மலையக கட்சிகள் பங்கேற்கவில்லை.

ஓய்வு பெற்றுச் செல்லும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவுக்கு பாராட்டு தெரிவிக்கும் பிரேரணை வியாழக்கிழமை காலை 10 மணி முதல் ஒரு மணிவரை இடம்பெற்றது.

ஓய்வு பெற்றுச் செல்லும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க படைக்கல சேவிதரால் காலை 10 மணிக்கு சபைக்குள் அழைத்துவரப்பட்டார்.

இதன்போது சபைக்குள் இருந்த பிரதமர். அமைச்சர்கள் உள்ளிட்ட ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மேசைகளில் தட்டி அவருக்கு வரவேற்பளித்தனர். என்றாலும் செயலாளர் சபைக்குள் வருவதற்கு முன்னர் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தனது ஆசனத்தில் இருந்து எழுந்து வெளியே சென்று விட்டார்.

சபைக்குள் அழைத்துவரப்பட்ட தம்மிக்க தசநாயக்க தனது நாடாளுமன்ற செயலாளர் நாயகருக்குரிய ஆசனத்தில் அமர்ந்தார். அவரின் குடும்பத்தினர் உறவினர்கள் சபாநாயகர் கலரியில் அமர்ந்திருந்தனர்.

இந்நிலையில் ஓய்வு பெற்றுச் செல்லும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவுக்கு பாராட்டு தெரிவிக்கும் பிரேரணையை சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த சமர்ப்பித்து ஆரம்பித்து வைத்தார். அதனைத்தொடர்ந்து எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, பிரதமர், அமைச்சர்கள், எம்.பிக்கள் என பலரும் உரையாற்றினார்கள். எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவும் நீண்ட நேரத்தின் பின்னர் சபைக்குள் வந்து அவரும் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

ஓய்வுபெற்றுச் செல்லும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவின் சேவைகள், திறமைகள், அர்ப்பணிப்புக்கள், சாதனைகள் தொடர்பில் பலரும் பல விடயங்களை முன்வைத்து வாழ்த்துக்களையும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர் .

ஆனால் ஓய்வு பெற்றுச் செல்லும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவுக்கு பாராட்டு தெரிவிக்கும் பிரேரணையில் தமிழ், முஸ்லிம். மலையக கட்சிகளைச் சேர்ந்த எந்த உறுப்பினரும் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கு பொதுச்சபை அமைக்கக் கலந்துரையாடல்



அம்பாறை, மே 27

அம்பாறை மாவட்ட லாகுகல பிரதேச செயலகத்தின் பாணம தெற்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கான பொதுச்சபை ஒன்றை அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் கூட்டம் எதிர்வரும் 2023.06.09 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு லாகுகலை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என லகுகலை பிரதேச செயலாளர் ந.நவநீதராஜா தெரிவித்தார்.

நம்பிக்கை பெறுப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 102 இற்கு அமைய பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவின் படியும் மற்றும் பொத்துவில் நீதிவான் நீதிமன்றத்தால் கோப்பிடப்பட்டுள்ள வழக்கின் 2023.05.23 ஆம் திகதிய விசாரணையின்போது நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படியும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டுதலுக்கு அமையவும் உகந்தைமலைமுருகன்ஆலயம்தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் பொதுச்சபையில் அங்கம் வகிக்க ஆர்வமுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி தொடக்கம் அம்பாறை மாவட்டத்தின் பாணம வரையிலான பிரதேசத்தில் நிரந்தரமாக வசிக்கும் இந்து மதத்தை பின்பற்றும் பொது மக்கள் தங்களது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களோடும் இந்து சமயத்தவரது பண்பாட்டு விழுமியங்களோடும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியுமென லாகுகல பிரதேச செயலாளர் ந.நவநீதராஜா மேலும் தெரிவித்தார். (05)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சடலங்களாக மீட்பு!

வீடொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். வயோதிபரான ஓய்வுபெற்ற ஆசிரியர், அவரின் மகன், மகனின் மனைவி ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

குருநாகல் பொலிஸ் பிரிவில் உள்ள வீடொன்றில் இருந்து வியாழக்கிழமை காலை 39 வயதுடைய கணவனும், 37 வயதுடைய மனைவியும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இருவரும் படுக்கை அறையில் வாயால் வாந்தி எடுத்த நிலையில் சடலங்களாகக் கிடந்துள்ளனர்.

அந்த அறையில் பயிர்களுக்குப் பயன்படுத்தப்படும் இரண்டு கிருமி நாசினிப் போத்தல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அந்தப் போத்தல்கள் வெற்றுப் போத்தல்களாக இருந்துள்ளன.

இருவரும் கிருமி நாசினியைக் குடித்து தற்கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சடலங்கள் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக குருநாகல் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி தம்பதியினர் உயிர்மாய்த்தமைக்கான காரணம் தெரியவரவில்லை. இவ்வாறிருக்கையில் சடலமாக மீட்கப்பட்ட குடும்பஸ்தரின் தந்தையான ஓய்வுபெற்ற ஆசிரியர் (வயது 65) நேற்று மாலை அதே வீட்டில் உள்ள மரமொன்றில் தூக்கில் தொங்கியபடி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மகன் மற்றும் மருமகள் இறந்த துயரத்தால் அவரும் தூக்கில் தொங்கி தற்கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அவரின் சடலமும் குருநாகல் வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. மூன்று சடலங்கள் மீதான உடற்கூற்றுப் பரிசோதனை இன்று இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் இறந்த மூவர் மாத்திரமே வசித்து வந்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் ஒரே நாளில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளமை அப்பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# லொறியின் கதவு கழன்று விழுந்ததில் சைக்கிளில் பயணித்த சிறுவன் இறப்பு

தனது சகோதரனுடன் சைக்கிளில் பயணித்த 13 வயது சிறுவன் ஒருவன் மீது பாண் ஏற்றிச் சென்ற சிறிய லொறியின் கதவு கழன்று வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளார் என வாதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹபரலகஹலந்த, வாதுவவை பிரதேசத்தைச் சேர்ந்த குணரத்ன ககன கவிந்த மெண்டிஸ் என்ற 13 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவன் பாடசாலை ஒன்றில் 8 ஆம் தரத்தில் கல்வி கற்பவராவார்.

வாதுவையிலிருந்து ஹபரலகஹலந்த நோக்கி தனது இளைய சகோதரனுடன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, பாண் லொறி ஒன்றின் பக்கவாட்டு இரும்புக் கதவு கழன்று சிறுவனின் மார்பில் பட்டபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

லொறி சாரதி கைது செய்யப்பட்டு பாணந்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (05)

# எமது நாம நற்பெயரை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

## சினோபெக் நிறுவனம் அறிவிப்பு

நாட்டில் எரிபொருள் விற்பனை செய்வதற்கு வெளி நிறுவனங்களை பயன்படுத்துவதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என சீனாவின் சினோபெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை தமது எரிவாயு நிலையங்களுக்கான சேவை உரிமைகளை வேறு எந்த தரப்பினருக்கும் மாற்ற விரும்பவில்லை என்றும் சினோபெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் தனது வர்த்தக நாமத்தின் நற்பெயரைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அறிவித்துள்ளது. அண்மையில் இலங்கை அரசாங்கத்துடனும், சினோபெக் நிறுவனத்துடனுமான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# ஐக்கிய அரபு அமீரகத்தில் ஹோட்டல் தீ விபத்தில் இலங்கைப் பெண் சாவு

ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் உள்ள பானி யாஸ் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் இலங்கைப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மேலும் அறுவர் உயிரிழந்துள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

குறித்த பெண் 2021 ஆம் ஆண்டு சுற்றுலா விசாவில் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்குச் சென்றார் எனவும் அவர் கூறினார். (05)

## உள்ளூராட்சி விவகாரங்களுக்கான

# ஜனாதிபதி ஆலோசகராக ரோஸிக்கு திடீர் நியமனம்

உள்ளூராட்சி விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகராக முன்னாள் கொழும்பு மேயர் ரோசி சேனாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரின் ஊடகச் செயலாளர் விராஜ் தாரக சிங்கள ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை உறுதிப்படுத்தியுள்ளார். ரோசி சேனாநாயக்க இன்னும் குறித்த பதவி ஏற்கவில்லை. பெரும்பாலும் அடுத்த வாரம் பதவியேற்பார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# ஓட்டோவில் இருந்து சடலம் கொட்டாவையில் கண்டெடுப்பு

கொட்டாவை மாகும் புர பிரதேசத்தில் வீதி ஒன்றுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவில் நபரொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவின் பின் ஆசனத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஒருவர் படுத்திருப்பது தொடர்பில் 119 அவசர இலக்கத்துக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று பார்த்தபோது குறித்த நபர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. உயிரிழந்தவர் யார் என்ற விவரம் இதுவரை வெளியாகவில்லை. (05)

# கந்தானை வெலிகம்பிட்டிய பகுதியில் வீட்டில் தனித்திருந்தவர் சடலமாக மீட்பு

கந்தானை வெலிகம்பிட்டிய பிரதேச வீடு ஒன்றில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

அதேபகுதியைச் சேர்ந்த 84 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த வீட்டில் உயிரிழந்த நபர் தனியாக வசித்து வந்தமையும் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபரின் மகள் வியாழக்கிழமை தனது தந்தையைப் பார்ப்பதற்காக வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது வீட்டின் கதவு மற்றும் ஜன்னல்கள் பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டதையடுத்து கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோதே அவரது தந்தை சடலமாகக் காணப்பட்டுள்ளார். (05)

ஆறு மாத DSL உத்தரவாதத்துடன்
dsl
We lead the way...!
Palma மின்கலங்கள்
IT Power Backupக்காக
PALMA
7Ah | 9 Ah | 20 Ah | 26 Ah | 42 Ah
65 Ah | 100 Ah | 150Ah | 200 Ah
ரூ.5,814 இருந்து
மின்சார தராசுகள் & பொம்மைகளுக்காக
6Ah | 12 Ah
ரூ.2,223 இருந்து
மின் மோட்டார் சைக்கிள்களுக்கான
12Ah | 20 Ah | 24 Ah | 28 Ah | 45 Ah
ரூ.13,252 இருந்து



Douglas & sons (pvt) ltd நான்கு தசாப்தங்களாக இலங்கை வாடிக்கையாளர்களின் வாகன மற்றும் பிற தேவைகளுக்காக சர்வதேச தரத்திலான பேட்டரிகளை இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.
077 307 8799
070 163 0209


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 11 வெள்ளிக்கிழமை 26.05.2023 கதிர் 69

## கைது செய்வதைத் தடுக்கக் கோரி போதகர் ஜெரோம் நீதிமன்றில் மனு

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தனது சட்டத்தரணிகள் ஊடாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று அவர் தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர், அதன் பணிப்பாளர் மற்றும் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலையத் தளபதி ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். 2

# ஏகமனதாகத் தெரிவு செய்தால்

# தமிழ் அரசுக் கட்சிக்கு தலைமை ஏற்க தயார்

## சீ.வி.கே.சிவஞானம் அறிவிப்பு




கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக என்னை தெரிவு செய்தால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையினை ஏற்கத் தயார் என அக்கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் தலைமை தொடர்பாக செய்தியாளரின் கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் பதவிக்காகக் கட்சிக்குள் போகவில்லை. முரண்பாடு இல்லாத நிலையேற்பட்டு அனைவரும் என்னை ஏகமனதாகத் தெரிவுசெய்வார்களாக இருந்தால், போட்டியில்லாது அனைவரதும் ஒத்துழைப்போடும் இணக்கப்பாட்டோடும் நான் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்வேன்.

ஒருமனதாக முரண்பாடு இல்லாமல் தெரிவு செய்யப்பட்டால், அந்தக் கடமையைச் செய்யக்கூடிய ஆற்றல் பொறுப்பு எனக்குள்ளது. அதற்காக நான் யாரையும் குறைசொல்லியோ யாரையும் கழுத்தறுத்து பதவிக்கு வர விரும்பவில்லை

தலைமைக்கு தகுதியுடையவர் என என்னைப் பலர் கேட்கின்றார்கள்; சொல்லுகின்றார்கள். ஆனால், கட்சி ஒற்றுமையாக இருக்கவேண்டும். ஒருமனதாக போகவேண்டும் என்ற எண்ணமே எனக்குள்ளது. அவ்வாறு இணக்கப்பாடு வந்தால் அதை நான் ஏற்றுக் கொள்வேன் - என்றார்.

# உலக வங்கி பிரதிநிதிகள் இன்று வவுனியா வருகை





வவுனியா மாவட்டத்தில் உலக வங்கியின் நிதிப்பங்களிப்பில் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்களை உலக வங்கிப் பிரதிநிதிகள் இன்று நேரில் பார்வையிட்டதுடன் சில இயந்திரங்களையும் வழங்கி வைத்தனர்.

வவுனியா நெளுக்குளத்தில் உள்ள விவசாய திணைக்கள கட்டடத்தில் கலப்பின சோளம் உற்பத்தியாளர்களை சந்தித்த உலக வங்கி பிரதிநிதிகள் அவர்களுக்கான இயந்திர தொகுதிகளை வழங்கி வைத்திருந்தனர். இதனையடுத்து விவசாயிகளுடனான சந்திப்பிலும் கலந்துகொண்டனர். இதன் போது உலக வங்கியின் திட்டப் பணிப்பாளர் ஜோன், வவுனியா பிரதிமாகாணவிவசாயபணிப்பாளர் எஸ். அற்புதசந்திரன் உற்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (100)

## கிழக்கு குடிதண்ணீர் பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுத்தர அமைச்சர் ஜீவன் உறுதி



கிழக்கு மாகாணத்தில் காணப்படும் குடிதண்ணீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் மாகாண உயரதிகாரிகளுக்கு உத்தரவாதமளித்தார் என்று அவரது அமைச்சின் ஊடகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கிழக்குமாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மாகாண தலைமைச் செயலாளர் மற்றும் மாகாண அமைச்சுகளின் உயர் மட்ட அதிகாரிகள் ஆகியோர் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானை சந்தித்து, கிழக்கு மாகாணத்தில் அவரது அமைச்சுசார்பில் மேற்கொள்ளக்கூடிய வேலைத் திட்டங்கள் தொடர்பில் பேச்சு நடத்தினர்.

கிழக்கு மாகாணத்தில் நிலவும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுதருமாறு கிழக்கில் இருந்து வந்த அதிகாரிகள் கோரிக்கை விடுத்தனர். இதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது உறுதியளித்தார்.

இதன் ஓர் அங்கமாகப் பின்தங்கிய பகுதிகளில் காணப்படும் நீர்விநியோகப் பிரச்சினைகளைச் சீர்செய்ய, உள்ளூராட்சி சபைகளுக்கு புதிய நீர்க்குழாய்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

தான் அமைச்சு பதவியை ஏற்ற பின்னர் கிழக்கில் மேற் கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் பற்றியும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கிழக்கு அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தினார்.

இந்த சந்திப்பில், நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனும் பங்கேற்றிருந்தார் என்று - அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேபோன்று, நேற்றுத் தன்னைச் சந்தித்துப் பேசிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜனிடம் வடக்கில் காணப்படும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்களுக்குத் தன்னால் முடிந்தவரையில் தீர்வைப் பெற்றுத் தருவேன் என்று அமைச்சர் உறுதியளித்திருந்தார்.




## நல்லூரைச் சேர்ந்த மூவர் தமிழ்நாட்டில் தஞ்சம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் இருந்து இன்று அதிகாலை மூவர் தமிழ் நாட்டில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த உதயபுரம் பகுதியில் வசித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரே இவ்வாறு தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

தாய், தந்தை, மகள் என இரு பெண்களும் ஓர் ஆணும் தமிழ்நாடு, இராமேஸ்வரத்தில் சென்று தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவ்வாறு தஞ்சம் அடைந்த மூவரும் பொலிசாரின் விசாரணையின் பின்னர் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## விஜபி பாதை வழியாக வருவோரிடமும் இனி சுங்க அதிகாரிகள் திடீர் சோதனை

விமான நிலையத்தின் விஜபி டெர்மினல்கள் (விஜபி) வழியாக வரும் அனைத்து விஜபிக்கள் மற்றும் அவர்களது பொதிகளைக் கடுமையாகச் சோதனை செய்யும் நடவடிக்கை விமான நிலைய சுங்கப் பகுதியினரால் தொடங்கியுள்ளது.

இதன்படி, விஜபி டெர்மினல்கள் வழியாக விமான நிலையத்திலிருந்து வெளியேறும் அனைத்து அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள் மற்றும் பிரமுக்கியஸ்தர்கள் இனி விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் விஜபி டெர்மினல் வழியாக வந்த உயரதிகாரி ஒருவர் சட்டவிரோதமான முறையில் கொண்டு வந்த மின் உபகரணங்களை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

8 கோடி ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் அலைபேசிகளை எடுத்துச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கைது செய்யப்பட்டதையடுத்து, விஜபி முனையங்கள் வழியாக வரும் பிரமுகர்களை சோதனையிட சுங்கத்துறை அதிகாரிகள் முடிவு செய்தனர்.

இந்த உயரடுக்கு முனையத்தின் ஊடாக நீண்ட காலமாக நாட்டின் அதிகாரவர்க்கத்தினர் பெருமளவிலான தடை செய்யப்பட்ட பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வந்திருக்கலாம் என விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த எலைட் டெர்மினல்கள் மூலம் தங்கம், ரத்தினங்கள், பணம் மற்றும் போதைப்பொருட்கள் கூட நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாக அவர்கள் நம்புகின்றனர். 2

## சம்பந்தனை இன்று திடீரென சந்தித்து சஜித் பிரேமதாச பேச்சு

### அரசியல் கள நிலவரம் தொடர்பில் இருவரும் ஆராய்வு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று திடீரென தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேசினார்.

சம்பந்தனது இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சம்பந்தனது உடல் நலம் குறித்து விசாரித்தறிந்து கொண்டார் எதிர்க் கட்சித் தலைவர் .

தற்போதைய அரசியல் நிலமைகள் தொடர்பில் இரு தலைவர்களும் விரிவாக ஆராய்ந்தனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஜனநாயகத்திற்கு அடிக்கப்பட்டுள்ள சாவு மணி குறித்தும் பொருளாதார ரீதியாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்தும்கூட இரு தலைவர்களும் ஆராய்ந்தனர் என்றும் தெரிவித்தனர்.



# கடன்களை மறுசீரமைக்காமல் முன்னேற்றமடையவே முடியாது

## ஜதார்த்தத்தை உணர்ந்தார் பந்துல

தேசிய மற்றும் வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்காமல் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடை முடியாது. நாட்டுக்காகவே பிரபல்யமடையாத தீர்மானங்களை அரசாங்கம் எடுத்துள்ளது.

இது அரசியல் ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தாலம். வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் அரசியல் கட்சிகள் பாரம்பரிய கொள்கைகளில் இருந்து விடுபடாமல் செயற்பட்டால் இந்த நாட்டுக்கு எதிர்காலம் என்பதொன்று கிடையாது என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிதி ஒழுங்குப்படுத்தல் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

பொருளாதாரப் பாதிப்புக்கு ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் ஏதாவதொரு வழிமுறையில் பொறுப்புக் கூற வேண்டும். அரசியல் காரணிகளை முன்னிலைப்படுத்தி பொருளாதாரம் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதால் தற்போது பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்து அதன் பொறுப்பு ஓர் அரசாங்கத்தின் மீது மாத்திரம் சுமத்தப்பட்டுள்ளது.

அரசமுறை கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத பின்னணியில் நாடு வங்குரோத்து நிலை அடைந்து விட்டது என



அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து வெளிநாடுகளின் ஒத்துழைப்புடன் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட உட்கட்டமைப்பு துறை அபிவிருத்தி பணிகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அரசியல்வாதிகளைக் கடுமையாக விமர்சிப்பதால் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி பணிகளை ஒருபோதும் தொடர முடியாது.

நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமாயின் தேசிய மற்றும் வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்க வேண்டும். கடன்களை இந்த வழிமுறையில் தான் மறுசீரமைக்க வேண்டும் என எம்மால் குறிப்பிட முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே கடன்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

தேசிய மற்றும் அரசமுறை கடன்களை மறுசீரமைக்காமல் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது என்பதே உண்மை. பொருளாதார மீட்சிக்கான சிறந்த கொள்கை இல்லாமல் மக்கள் ஏமாற்றி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றலாம், ஆனால் அரசாங்கத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியாது.

நாட்டுக்காகவே அரசாங்கம் பிரபல்யமடையாத தீர்மானங்களை எடுத்துள்ளது. இது அரசியல் ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தலாம். வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் அரசியல் காரணிகளுக்கு முக்கியத்துவம் வழங்க முடியாது. மின்னுற்பத்தி கட்டமைப்பின் கொள்கை தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. செலவுக்கு அமைய வருமானம் ஈட்டிக் கொள்ள வேண்டும். பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள வேண்டுமாயின் அரசியல்வாதிகள் பாரம்பரியமான கொள்கைகளில் இருந்து விடுபட வேண்டும். நாட்டுக்காக ஆளும் மற்றும் எதிர்தரப்பினர் தமது கொள்கையை மாற்றிக் கொள்ளாவிட்டால் இந்த நாட்டுக்கு எதிர்காலம் என்பதொன்று கிடையாது. – என்றார். (05)

# தனிநபர் வங்கி கடன் விவகாரத்தில் அரசு தலையிடாது அரசியல்வாதிகள் பொறுப்பற்ற கருத்துகளைத் தவிர்க்குக

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய காட்டம்

அரசாங்கத்தின் பிரதான 10 நண்பர்கள் வங்கிகளில் பெற்றுக்கொண்ட கடன்களை தேசிய கடன் மறுசீரமைப்பு ஊடாக மறுசீரமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றமை அடிப்படையற்றது.

தனிநபர் வங்கி கடன் விவகாரத்தில் அரசாங்கம் தலையிடாது. ஆகவே பொறுப்பற்ற வகையில் கருத்துரைப்பதை சிரேஷ்ட அரசியல்வாதிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிதி ஒழுங்குப்படுத்தல் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை அரசாங்கம் சிறந்த முறையில் முன்னெடுத்துள்ளோம். கடன் மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் மேற்கொள்ளப்படுகிறது. தேசிய மற்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு பணிகள் பொறுப்புடன் மேற்கொள்ளப்படும்.

தேசிய முறை கடன் மறுசீரமைப்பின் போது அரசாங்கத்தின் நண்பர்கள் பெற்றுக்கொண்ட வங்கி கடன்களை மறுசீரமைக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம குறிப்பிட்டுள்ள கருத்து பாரதூரமானது. வரி அதிகரிப்பால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான முறையற்ற கருத்துக்கள் சமூக மட்டத்தில் தேவையற்ற பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம குறிப்பிட்ட கருத்து தொடர்பில் சகல அரச வங்கிகளின் பிரதானிகளிடமும், திறைசேரியின் செயலாளரிடமும் வினவினேன். தனிநபர்கள் பெற்றுக்கொண்ட வங்கி கடன்களை மறுசீரமைக்கவோ



அல்லது கடன் மறுசீரமைப்பு ஊடாக அவர்களுக்கு நிவாரணம், சலுகை வழங்கவோ எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார்கள். இரு பிரதான அரச வங்கிகள் சமர்ப்பித்துள்ள அறிக்கையை சபைக்கு சமர்ப்பிக்கிறேன்.

அரசாங்கத்தின் 10 நண்பர்கள் என்று குறிப்பிடும் நபர்கள் பெற்றுக்கொண்ட கடன்களை மறுசீரமைக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. அவ்வாறான தீர் மானம் எடுக்கப்படவில்லை. எதிர்காலத்திலும் அவ்வாறான தீர்மானங்களை எடுக்கப் போவதில்லை என்பதை தெளிவுடன் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் சட்ட விரோதமான முறையில் 3 கிலோகிராம் தங்கம், 96 ஸ்மார்ட் தொலைபேசி ஆகிய–வற்றை கொண்டு வந்து விமான சுங்கத் தரப்பினரிடம் அகப்பட்டார். தான் செய்தது தவறு என்பதை அவர் ஏற்றுக்கொண்டு சுங்க பிரிவு சட்டத்தின் பிரகாரம் தண்டப்பணம் செலுத்திவிடுதலையாகியுள்ளார். தான் நெருக்கடியான சூழ்நிலையில் இருந்த போது அரசாங்கம் தனக்கு உதவவில்லை, அதனால் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்தேன் என்று ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளார். இது அரசாங்கத்துக்கான ஒரு நற்சான்றிதழாகும். தவறான செயற்பாடுகளுக்கு துணைபோக வேண்டிய தேவை எமக்கு கிடையாது. எதிர்வரும் நாள்களில் அலி சப்ரி ரஹீம் எதிர்க்கட்சி பக்கம் செல்லலாம். – என்றார். (05)

# ஊடகர் மாணிக்கவாசகத்தின் நினைவேந்தல் நிகழ்வு நாளை

ஊடகப் பேராளுமை பொன்னையா மாணிக்கவாசகத்தின் 45ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு வவுனியா நகர மண்டபத்தில் நாளை காலை 10 மணிக்கு இடம்பெறும்.

மூத்த ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை வவுனியா ஊடக அமையத்தலைவர் பரமேஸ்வரன் கார்த்தீபன் நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து நினைவுரைகள் வரிசையில் 'ஊடகவியலில் மாணிக்கவாசகம்' எனும் தலைப்பில் சிரேஸ்ட ஊடகவியலாளர் ரத்துகமகே சிறப்புரை நிகழ்த்துவார்.

'கலை பண்பாட்டு வளர்ச்சியில் மாணிக்கம்' எனும் தலைப்பில் வவுனியா வடக்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ. பிரதீபனும், 'மக்கள் சேவையில் மாணிக்கவாசகம்' எனும் தலைப்பில் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் தலைவர் செ. சந்திரகுமாரும், 'வாசகர்பார்வையும் அனுபவ பகிர்வும்' எனும் தலைப்பில் சட்டத்தரணி ஐயம்பிள்ளை யசோதரனும் கருத்துரைகளை வழங்குவர்.

அரசியல் கருத்து வேறுபாடுகள் இன்றி நிகழ்வவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வவுனியா ஊடக அமையம் அழைப்பு விடுத்துள்ளது. (100)

# அமைச்சரின் நடவடிக்கைகளில் தலையிடாதீர் என எச்சரிக்கை

## பிரபல சட்டத்தரணிக்கு தொலைபேசி மிரட்டல்

அமைச்சரின் நடவடிக்கைகளில் தலையிடவேண்டாம் என பிரபல மனித உரிமை சட்டத்தரணியொருவருக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மனித உரிமை சட்டத்தரணி பிரியலால் சிறிசேனவை தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட நபர் ஒருவர் அமைச்சரின் நடவடிக்கைகளில் தலையிடவேண்டாம் என்று எச்சரித்துள்ளார்.

சட்டத்தரணி பிரியலால் அந்த நபர் யார் அவர் குறிப்பிட்ட அமைச்சர் யார் என்பதை அறிவதற்கு முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் உரியபதில் கிடைக்கவில்லை

வெளிநாட்டு தொலைபேசி இலக்கத்திலிருந்தே சட்டத்தரணி சிறிசேனவிற்கு குறிப்பிட்ட தொலைபேசி அழைப்பு வந்துள்ளது.

இது தொடர்பாக சிறிசேன குருநாகல் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அதிகம் நடனமாடவேண்டாம் அமைச்சருக்கு எதிரான உங்கள் செயற்பாடுகளை விலக்கிக்கொள்ளுங்கள். நீங்கள் வீதியில் நடமாடவேண்டும் என்பதை மறக்கவேண்டாம் என தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட நபர் சட்டத்தரணிக்கு மிரட்டல் விடுத்துள்ளார்.

16 வருடங்களாக சட்டத்தரணியாக பணிபுரிகின்ற பிரியலால் சிறிசேன மனித உரிமை செயற்பாட்டாளராகவும் விளங்குகின்றார், 2018 ஆம் ஆண்டின் பயங்கரவாத தடைசட்டத்தை எதிர்த்த இவர் பொலிஸாருக்கு எதிராக நீதிமன்றில் பல மனுக்களை தாக்கல் செய்துள்ளார்.

2016 இல் பொலிஸாரால் கணவர் கொலை செய்யப்பட்ட பெண் ஒருவர் சார்பில் சிறிசேன நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வுகளிலும் அவர் கலந்துகொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# விடுமுறையில் வீடு வந்திருந்த சிப்பாய் வெட்டிப் படுகொலை!

## பண்டாரவளையில் பயங்கரம்

விடுமுறையில் வீடு வந்திருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பண்டாரவளைப் பொலிஸ் பிரிவில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது 37 வயதுடைய எம்.பி. குணரட்ன என்ற இராணுவச் சிப்பாயே சாவடைந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான குறித்த இராணுவச் சிப்பாய்க்கும் அயல்



வீட்டாருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் கொலையில் முடிந் துள்ளது.

கொலையாளி தலைமறைவாகியுள்ளார்.

அவரைக்கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

கொலையாளியும் உயிரிழந்த இராணுவச்சிப்பாயும் சம்பவம் இடம்பெற்றபோது மதுபோதையில் இருந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இராணுவச்சிப்பாயின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (02)

## கைது ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிவாதிகள் தன்னைச் சட்டவிரோதமாகக் கைது செய்யத் தயாராகி வருகின்றனர் என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது எனத் தீர்ப்பளிக்குமாறும், அவர்கள் தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவைப் பிரதிவாதிகளுக்கு வழங்குமாறும் கோரியும் குறித்த மனுவைப் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தனது சட்டத்தரணிகள் ஊடாகத் தாக்கல் செய்துள்ளார். (02)

## விஜபி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனிமேல் இந்த விஜபி டெர்மினல்களுக்குள் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் விஜபிக்களை அடிக்கடி முறையில் சோதனை செய்ய சுங்கத் தலைமையகத்தில் இருந்து உத்தரவு வந்துள்ளதாக விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 14 வயது சிறுவன் கார் மோதிச் சாவு

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த சிறுவனைக் கார் மோதியதில் சம்பவ இடத்திலேயே குறித்த சிறுவன் சாவடைந்துள்ளார்.

இந்தச்சம்பவம் இரத்தினபுரி, பலாங்கொடை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

14 வயது சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் சடலம் பலாங்கொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

காரின் சாரதியைக் கைது செய்த பலாங்கொடை பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# வயோதிபர் ஒருவர் அடித்துக் கொலை!

## கைகள் கட்டப்பட்ட நிலையில் சடலம் மீட்பு

வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தானை – வெலிகம்பிட்டிய பகுதியில் வசித்து வந்த 84 வயதுடைய ஜா – எல பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரு கைகளும் கட்டப்பட்ட நிலையில் முகம் மற்றும் கழுத்துப் பகுதி துணியொன்றால் சுற்றப்பட்ட நிலையில் சடலம் காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவைத்துள்ளனர்.

குறித்த நபரின் புதல்வி வழங்கிய தகவ–லுக்கு அமையவே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபரின் உடலில் அடிகாயங்கள் காணப்படுவதால் அவர் கொலை செய்–யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# மட்டக்களப்பில் மர முந்திரிகை விளைச்சல் பாரியளவில் வீழ்ச்சி



மட்டக்களப்பு மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கை அறுவடை ஆரம்பித்திருக்கிறது. இந்தமுறை மரமுந்திரிகைச் செய்கை விளைச்சல் பாரிய வீழ்ச்சியடைந்திருப்பதாக மரமுந்திரிகைச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அடிக்கடி பெய்த மழை மற்றும் கடுமையான வெப்பமான காலநிலையே இதற்கான காரணமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பூக்கள் கருகி காய்க்கும் வீதம் பெருமளவில் குறைவடைந்துள்ளதாகவும் இதன் காரணத்தால் மரமுந்திரிகை செய்கையாளர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர் எனவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (05)

# சர்வதேச சுரங்க, கனிம தொழில்துறை சார்ந்த நிகழ்வுகள் ஒக்ரோபரில் ஏற்பாடு

## நசீர் அஹமட் தகவல்

இலங்கையில் முதலாவது சர்வதேச சுரங்க மற்றும் கனிம உச்சிமாநாடு, முதலீட்டாளர் மன்றம் மற்றும் கண்காட்சியை நடத்த அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

சர்வதேச சுரங்க மற்றும் கனிம தொழில்துறை சார்ந்த இந்நிகழ்வு இவ்வாண்டு ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான முன்மொழிவை சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் சமர்ப்பித்துள்ளார்.

இந்த சர்வதேச நிகழ்வு குறித்து அமைச்சர் அஹமட் கூறுகையில் –

இலங்கைக்கான பெருமளவான முதலீடு மற்றும் பொருளாதார வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு இலங்கையின் கனிமங்களின் தனித்துவத்தை மீளமைப்பதன் மூலம் இடைக்கால நோக்கில் இலங்கை கனிம தொழில்துறைக்கான சர்வதேச வர்த்தக மதிப்பைக் கட்டியெழுப்புவது இந்த நிகழ்வின் பிரதான நோக்கமாகும்.

கனிமங்கள் இயற்கையின் நன்கொடை. பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் அந்நியச் செலாவணி வருவாயில் கனிம ஏற்றுமதி பிரதான பங்காற்றுகிறது.

ஒரு நாடு உச்சபட்ச கனிம வளங்களைப் பெற்றால், அந்நாட்டால் பொருளாதார சுபீட்சத்தை அடைய முடியும்.

பெரும் அந்நியச் செலாவணி பற்றாக்குறைக்கு இலங்கை முகங்கொடுத்திருக்கும் இவ்வேளையில், கனிமங்களின் ஏற்றுமதி மற்றும் கனிமம் அடிப்படையிலான பெறுமதி சேர்ப்பு உற்பத்திகள் இலங்கையின் அடுத்த 'பில்லியன் டொலர் தொழில்துறையாக' மாறுவதற்கான அதிக ஆற்றலைக் கொண்டதாக உள்ளது.

சுற்றாடல் அமைச்சின் நோக்கெல்லைக்குள் இருக்கும் புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகம் இலங்கையில் உள்ள 43 கனிம வளங்களை அடையாளம் கண்டு அட்டவணையிட்டுள்ளது.

அவற்றில், கிராபைட், கனமான கனிம மணல், சுண்ணாம்புக்கல், உருவளவைக் கற்கள், வைன் குவாட்ஸ் முதலியவை மிக மதிப்புடைய ஏற்றுமதி வாய்ப்புடையவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் நிறைவேற்றப்பட்ட பாதுகாப்பு கொள்கைகளின் காரணமாகவே இலங்கையால் உண்மையான மற்றும் உலகத் தரம் வாய்ந்த கனிம மற்றும் சுரங்கத் தொழில்துறை பங்குதாரர்களை கவர முடியாமல் போனது. மறுபுறம், இது நாட்டின் பல வாய்ப்புகளையும் இழக்கச் செய்து, தொழில்துறையின் வளர்ச்சியைத் தடுத்து, போட்டி, எதிர்ப்புத் தொழில்துறை நடைமுறைக்கு வழிவகுக்கிறது.

ஜனாதிபதியின் அண்மைய வரவு ஃ செலவுத் திட்ட உரையில் ஏற்றுமதிகளின் 3 பில்லியன் டொலர்கள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் 3 பில்லியன் டொலர்களை ஈட்ட இலக்கு நிர்ணயித்தார். அதனால், வெளிநாட்டு நேரடி முதலீடு மூலம் புதிய ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடும் துறைகளை ஆரம்பிக்க வேண்டியிருப்பதோடு, புதிய தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது.

கனிமங்கள் அவ்வாறான புதிய ஏற்றுமதித் துறையாக இருக்கலாம். அது நாட்டுக்கு அந்நியச் செலாவணியை சேமிக்கும் அதேவேளை பல தொழில்வாய்ப்புகளை உருவாக்கும் கனிம அடிப்படையிலான இறக்குமதி மாற்றுத் தொழில்துறைகளின் வளர்ச்சி மற்றும் ஏனைய தொழில்துறைகளின் உருவாக்கத்துக்குக் காரணமாகக்கூடும்.

இலங்கையில் கனிம மற்றும் சுரங்கத் தொழில்துறை ஜனாதிபதியின் தொழில்துறையை ஊக்குவிப்பதன் மூலம் 'அதிக முதலீடு மற்றும் அதிக ஏற்றுமதி' சாத்தியங்களைப் பயன்படுத்தும் மூலோபாய பொருளாதார நோக்கை செயலாக மாற்றுவதில் சிறந்த உதாரணமாக உள்ளது.

1957 இலேயே இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் நிறுவப்பட்டிருந்த போதும் பெறுமதி சேர் கனிம உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு முடியாமல் போயுள்ள இலங்கையின் துரதிர்ஷ்ட நிலையை முடிவுக்குக் கொண்டுவந்து ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் கனிம மற்றும் சுரங்கத் தொழில்துறை மிக விரைவில் வெளிப்படையான மற்றும் பொறுப்பான வளர்ச்சியை நோக்கிச் செல்லும் என்று அமைச்சர் அஹமட் நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும் அவர், திட்டமிடப்பட்டிருக்கும் சர்வதேச தொழில்துறை நிகழ்வு 'புதிய எல்லைகளுக்குள் நுழைதல்' என்ற கருப்பொருளைக் கொண்டிருக்கும்.

இந்த பன்முகத்தன்மை கொண்ட நிகழ்வு பரந்தளவில் உள்நாடு மற்றும் சர்வதேச ரசிகர்களைக் கவரும்.

மேலும், புதிய எதிர் பார்ப்புகளை வழங்கி, அதிநவீன தொழில்நுட்பத்தை பகிர்தல், கனிமங்கள் குறித்த தேசிய நிகழ்ச்சி நிரலை இயக்கும் அறிவு, நுண்ணறிவு மற்றும் இவ்வளர்ந்து வரும் தொழிலில் முதலீட்டாளர்களின் ஆர்வத்தை அதிகரித்தல் என்பவற்றினூடாக நாட்டின் பொருளாதார மீட்சிக்கு பெரும் பங்காற்றும் என சுற்றாடல் அமைச்சர் தெரிவித்தார்.



இதேவேளை இந்த நிகழ்ச்சி தொடர்பில் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியக தலைவர் சஞ்சீபன் ரவி கூறுகையில் –

முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச சுரங்க மற்றும் கனிம உச்சிமாநாடு, முதலீட்டாளர் மன்றம் மற்றும் கண்காட்சி நிகழ்வு இலங்கையின் தற்போதைய மற்றும் எதிர்கால கனிம தொழில்துறையின் அனைத்து பங்குதாரர்களுக்கும் சிறந்த தளத்தை வழங்கும்.

அந்த வகையில் இந்த நிகழ்வுகள் –

வெளிநாடுகளில் இருந்து மேம்பட்ட தொழில்நுட்பங்களை கொண்டுவருவதில் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு வழங்கல் தனியார் மற்றும் வெளிநாட்டு நிதி வாய்ப்புகள் பற்றிய பேச்சு.

தற்போதைய தொழில்நுட்பங்களுடன் புதிய தொழில்நுட்பங்களைப் பெறுதல் மற்றும் ஒருங்கிணைப்பதற்கான மாறுபட்ட மூலோபாயங்களை மதிப்பிடுதல்

கனிமங்களை பிரிப்பது மற்றும் கண்டுபிடிப்பதில் வரவிருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சிகளை ஆய்வு செய்தல்.

கூட்டாண்மைகள் ஃ வர்த்தகப் பொருத்தம் மற்றும் உள்நாட்டு முதலீட்டு வாய்ப்புகளை கண்டறிதல் போன்றவற்றுக்கு வழிவகுக்கும்.

இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை கண்டறிவதற்கு பல நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 20 இற்கும் அதிகமான புகழ்பெற்ற சர்வதேச கனிம நிறுவனங்கள் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன.

மேலும், இந்த நிகழ்ச்சி கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்கும், அவர்கள் அனைவரையும் ஒரே மேடையில் கொண்டு வந்து, அவர்களின் திட்டக் கருத்துக்களை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்கும் உதவியாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார். (05)

# பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு அறிவார்ந்த அரசியல்வாதிகள் இல்லை

## வாகன இறக்குமதியாளர் சங்கம் குற்றச்சாட்டு

நாட்டில் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் முன்வைக்கும் தீர்மானங்களை கேட்பதற்கு பொருத்தமான அரசியல் வாதிகள் இல்லை என இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவி–யலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்துக்கு இலாபத்தை பெற்றுத் தரும் வகையில் வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்குமாறு இலங்கையின் வாகன இறக்குமதியாளர்கள் இலங்கை அரசாங்க அதிகாரிகளிடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து இருந்தனர்.

இந்த நிலையில் ஜப்பானிய வாகனங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் நடவடிக்கைகள் மிக விரைவில் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜப்பானிய வாகன நிறுவன பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துடனுமான கலந்துரையாடலிலே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது, இதனைத் தொடர்ந்து ஜப்பானிடம் இருந்து உதவி பெறலாம். ஆனால் தமது முன்மொழிவுகளைக் கேட்டு செயற்படும் வகையில் அறிவார்ந்த அரசியல்வாதிகள் நாட்டில் இல்லாதமை துரதிர்ஷ்டவசமானது என இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே மேலும் தெரிவித்துள்ளார். (05)

# இலங்கையில் மீண்டும் வாகன இறக்குமதி!

ஜப்பானிய வாகனங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் நடவடிக்கைகள் மிக விரைவில் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய வாகன நிறுவன பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துடனுமான கலந்துரையாடலிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்குமாறு இலங்கையின் வாகன இறக்குமதியாளர்கள் இலங்கை அரசாங்க அதிகாரிகளிடம் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்தும் இருந்தனர்.

அந்தநிலையில் அண்மையில் கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதுவரும் சுதந்திர வர்த்தகம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதனால் மிக விரைவில் மீண்டும் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட அதிக வாய்ப்பு உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# மகாவலி அதிகார சபை மீது கோப் குழு குற்றச்சாட்டுகள்!



மகாவலி அதிகார சபை தனது சேவைகளை வினைத்திறனுடன் செய்யத் தவறியுள்ளதாக கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார குற்றஞ்சுமத்தியுள்ளார்.

பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது அதிகாரசபையின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்ட போதிலும், அந்த நோக்கத்தை நிறைவேற்று வதற்கு தவறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மகாவலி அதிகாரசபையின் கொள்கைகளை ஆராய்ந்து, நவீனமயமாக்கலுடன் இணக்கமாக செயற்படுவது தொடர்பில் மறுசீரமைக்குமாறு கூட்டுறவுக் குழுவின் தலைவர் மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர்நாயகத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மேலும், நில ஒதுக்கீடு செயற்பாட்டில் டிஜிற்றல் உட்கட்டமைப்பை வலுப்படுத்துவது தொடர்பிலும் விவரிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் காணிபரிமாற்றநடைமுறை தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது, (05)

# அரசாங்கத்தின் நிவாரண வேலைத் திட்டங்களில் மலையகம் உள்வாங்கப்படுவதை உறுதிப்படுத்துக

## வே. இராதாகிருஷ்ணன் வலியுறுத்து

அரசாங்கத்தின் நிவாரண வேலைத்திட்டத்தில் மலையக மக்கள் உள்வாகங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இது தொடர்பாக உலக வங்கி பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதும் தெரிவித்திருக்கிறோம் என எதிர்க்கட்சி உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அரசாங்கத்தின் நிவாரணப்பணி வேலைத்திட்டத்தில் மலையக மக்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.



உலக வங்கியின் உதவியுடனே இதனை முன்னெடுக்க இருக்கிறது. அதனால் உலக வங்கி பிரிதிநிகளுடனும் இது தொடர்பாக கலந்துரையாடி இருக்கிறோம். நாடு வங்குரோத்து அடைந்திருக்கும் நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவி செய்யும் நோக்கிலே இதனை அரசாங்கம் செய்ய முற்பட்டிருக்கிறது. அதனால் பின்தங்கிய மக்கள் என்றவகையில் மலையக மக்களை இதில் புறக்கணித்துவிடக்கூடாது எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

வசதி உள்ளவர்களிடமிருந்து அதிக வரியை பெற்று ஏழை மக்களுக்கு வழங்குவதன் மூலம் அரசாங்கம் இதனை சமநிலைக்கு கொண்டுவர முடியும். அதேநேரம் வியாபார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் பதுளையை சேர்ந்த பெண்ணின் மரணம் தொடர்பாக பலரும் பேசிவருகின்றனர்.

அதனால் அந்த மரணம் கொலையா தற்கொலையா என முறையாக விசாரணை நடத்துவதுடன் இந்த விடயத்தில் பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட வேண்டும். - என்றார். (05)

# வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மோசடிகள் நாட்டில் அதிகரிப்பு

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை பெற்றுத்தருவதாக கூறி பல்வேறு மோசடிகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் வேகமாக அதிகரித்து வருகின்றன என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே பிரதிப் பொது முகாமையாளர் காமினி சேனாரத்யபா இவ்வாறு தெரிவித்தார். அந்தவகையில் இவ்வருடம் மாத்திரம் 1,150 இற்கும் அதிக மான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேலும் இவ்வாறான மோசடிகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறும், அரசாங்கம் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஜப்பானுடனான உறவில் அதிக அக்கறை செலுத்தும் ரணில்

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜப்பான் சென்றுள்ளார். ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறும் "ஆசியாவின் எதிர்காலம்" என்ற மாநாட்டின் 28ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு சென்றிருந்தாலும், அந்த நாட்டுத் தலைவர்களுடனன் இரு தரப்புப் பேச்சுக்களையும் அவர் முன்னெடுக்கின்றார்.

மாநட்டில் உரையாற்றிய அரசுத் தலைவரர் ரணில், ஜப்பானியத் தலைமை அமைச்சர் புமியோ கிஷிடாவின் 'அமைதிக்கான கொள்கைகள் மற்றும் செழுமைக்கான சட்டங்கள்' கொள்கைக்கு தனது முழு ஆதரவையும் தெரிவித்தார். அது மட்டுமல்ல இந்தப் பயணத்தின் போது, கிஷிடாவுடனான சந்திப்பில், டோக்கியோவுடன் கைச்சாத்திடப்பட்ட முக்கிய உட்கட்டமைப்பு ஒப்பந்தத்தை இலங்கை நிறுத்தியது உட்பட ஜப்பான் தொடர்பான கடந்தகால நடவடிக்கைகள் குறித்து விக்கிரமசிங்க வருத்தம் தெரிவித்தார்.

ஜப்பானுடன் பல முதலீட்டு திட்டங்களை மீண்டும் தொடங்குவதற்கு தனது நாடு ஆர்வமாக இருப்பதாக ஜனாதிபதி பரிந்துரைத்தார்.

நிறுத்தப்பட்ட அல்லது இல்லாமலாக்கப்பட்ட திட்டங்களை நாங்கள் மீண்டும் தொடங்குகிறோம், என்று அவர் கூறினார்.

ஜப்பான் புறப்படுவதற்கு முன்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் பேசியபோது, இனி வரும் காலங்களில் இரு நாடுகளுக்கு இடையில் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்தின் அனுமதி இன்றி நிறுத்தவோ, இல்லாமலாக்கவோ கூடாது, அதற்கான சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

ஆக மொத்தத்தில் ஜப்பானைத் திருப்திப்படுத் துவதில் அரசுத் தலைவர் அதிகம் கரிசனை கொண்டிருக்கின்றார் என்பது தெரிகின்றது. ஜப்பான் இலங்கையின் கடன் வழங்கு நாடுகளில் ஒன்றாகவும் இருக்கின்றது. இப்போது அதன் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமலுள்ள இலங்கை அதனை மறுசீரமைப்புச் செய்வதற்கும் எதிர்பார்த்துள்ளது. அது தொடர்பான பேச்சுக்கள் நடந்து வருகின்றன. இந்த நிலையில் காயப்பட்டுள்ள ஜப்பானுடனான உறவுகளைச் சீர் செய்வதில் ரணில் அக்கறை செலுத்துகின்றார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் நீண்ட காலத்திற்கு முன்பே ஆழமான தாற்பரியத்தைக் கொண்டிருக்கின்றன. இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோற்று நின்றபோது, அந்தப் போரில் வெற்றிபெற்ற மேற்கு நாடுகள், ஜப்பானிடம் இருந்து இழப்பீடு பெறவேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றபோது அதற்கெதிராகக் குரல் கொடுத்த முதல் நாடாக இலங்கையே இருந்தது என்று சொல்லப்படுகின்றது. கடைசியில் ஜப்பான் பெருந்தொகை இழப்பீடு செலுத்துவதிலிருந்து தப்பிப் பிழைத்தது.

அந்த நன்றிக் கடனுக்காக ஜப்பான் இலங்கைக்கு ஏராளமான பெரும் உதவிகளைச் செய்திருக்கின்றது. இன்னும் செய்து கொண்டிருக்கின்றது. எனினும் ராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் அந்த உறவில் உரசல்கள், விரிசல்கள் ஏற்பட்டிருந்தன. இப்போது அதைச் சரிசெய்து மீண்டும் ஜப்பானின் பேராதரவைப் பெறுவதில் ரணில் அதிக அக்கறை காட்டுகின்றார்.

# 7 மில்லியன் மக்களுக்கு உதவுவதற்கு 123.5 மில்லியன் டொலர் நிதி சேகரிப்பு

## இலங்கை தொடர்பான ஐ.நா.சபை அறிக்கை சுட்டிக்காட்டு

இலங்கைகடந்த ஆண்டு மிகமோசமான சமூக, பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த நிலையில், அதன்விளைவாக வெகு-வாகப் பாதிக்கப்பட்டிருந்த 2.9 மில்லியன் மக்களுக்கு அவசியமான உடனடி மனிதாபிமான உதவிகளைத் தாம் வழங்கியதாகவும் மொத்தமாக 7 மில்லியன் மக்களுக்கு உதவும் நோக்கில் 123.5 மில்லியன் டொலர் நிதி திரட்டப்பட்டதாகவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் சமூக, பொருளாதார நிலைவரம் மற்றும் அதில் நிலவிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகள் சபையாலும் அதன் கிளை அமைப்புக்களாலும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கி இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு -

இலங்கை மக்களைப் பொறுத்தமட்டில், குறிப்பாக பின்தங்கிய சமூகப்பிரிவினருக்குக் கடந்த 2022 ஆம் ஆண்டு மிகவும் கடினமான காலப்பகுதியாகவே அமைந்திருந்தது. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்விநியோகத்தடை, உயர் பணவீக்கம், வாழ்க்கைச்செலவு உயர்வு, அரசியல் ரீதியில் ஏற்பட்ட மாறுதல்கள் என்பன மக்களின் அன்றாட வாழ்வில் பல்வேறு தாக்கங்களை ஏற் படுத்தியதுடன் உடனடி மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் நிலைக்கு அவர்களைத் தள்ளியது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பொதுமக்கள் கடுமையான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தமை தொடர்பில் எமது தீவிர கரிசனை வெளிப்படுத்தும் அதேவேளை, அத்தியாவசிய உதவிகள் தேவைப்படுவோருக்கு எம்மால் இயன்ற உதவிகளை வழங்குவதில் நாம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாட்டை மீளுறுதிப்படுத்துகின்றோம்.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு அவசியமான குறிப்பிடத்தக்களவிலான மனிதாபிமான உதவிகளை வழங்கியிருந்ததுடன் விரிவான சமூக-பொருளாதார மீட்சிக்கும் பங்களிப்புச்செய்திருந்தது. அதன்படி சுமார் 2.9 மில்லியன் மக்களுக்கு, அதாவது நாட்டின் மொத்த சனத்தொகையில் 10 சதவீதமானோருக்கு அவசியமான உடனடி உதவிகள் ஐக்கிய நாடுகள் சபையின் கிளைக்கட்டமைப்புக்களால் வழங்கப்பட்டன.

மேலும் ஐக்கிய நாடுகள் சபை கடந்த ஆண்டு இலங்கை தொடர்பில் அதன் ஐந்து வருட கால நிலைபேறான அபிவிருத்திச்செயற்திட்டத்தை ஆரம்பித்துவைத்தது. இருப்பினும்கூட மிகவும் பின்தங்கிய சமூகப்பிரிவினர் வெகுவாகப் பாதிப்படையக்கூடிய-வகையிலான நெருக்கடி நிலைக்கும், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதில் பல்வேறு சவால்களுக்கும் இலங்கை தொடர்ந்து முகங்கொடுத்துக்கொண்டிருந்தது. ஆனால் மறுபுறம் இலங்கைக்கும் சர்வதேச நிதியியல் கட்டமைப்புக்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பில் குறிப்பிட்டுக்கூறத்தக்க முன்னேற்றம் தென்பட்டது.

அதேவேளை கடந்த 2022 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 7 மில்லியன் மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன என மதிப்பிடப்பட்டதுடன், இதுவரை அவர்களில் 2.9 மில்லியன் பேருக்கு அவசியமான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதுமாத்திரமன்றி அவர்களுக்கு உதவுவதற்கென சர்வதேச நாடுகள், இருதரப்பு மற்றும் பல்தரப்புப் பங்காளிகள், நன்கொடையாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து மொத்தமாக 123.5 மில்லியன் டொலர் நிதி திரட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# 6 ஆயிரம் யானைகளைக் காக்க 10 ஆயிரம் சிவில் படையினர்கள்

## பிரமித தென்னகோன் கூறுகிறார்



விகாரைகளில் சேவை செய்வதற்காக சிவில் பாதுகாப்பு படையை சேர்ந்த சுமார் 2 ஆயிரத்து 500 பேர் இருந்து வருகின்றனர்.

ஆனால், அவர்களின் சேவை தொடர்பில் சரியான தகவல் எதுவும் இல்லை. இதற்காக வருடத்துக்கு 2.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்படுகிறது.

நாட்டின் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் இந்த நிலையை தொடர்ந்து கொண்டுசெல்ல முடியாது என இராஜாங்க அமைச்சர் பிரமித்த தென்னகோன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

சிவில் பாதுகாப்பு படையில் சுமார் 33 ஆயிரம் பேர் வரை இருக்கின்றனர். இவர்கள் எல்லைக் கிராமங்களைப் பாதுகாக்கும் கடமைகளில் இருந்து வருகின்றனர். அவர்களின் சேவை மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

இவ்வாறான நிலையில், இவர்கள் நாட்டில் இராணுவம் மற்றும் பொலி-ஸாருக்கு ஓய்வூதியம் வழங்குவது போல் தங்களுக்கும் அதனை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இது தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம்.

மேலும், சிவில் பாதுகாப்பு பிரிவில் 5 ஆயிரம் பேர் யானை வேலியை பாதுகாக்கும் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோன்று கிராமங்களுக்குள் யானை வராமல் தடுப்பதற்காக மேலும் 10 ஆயிரம் பேர் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

ஆனால், நாட்டில் சுமார் 6 ஆயிரம் யானைகளே இருக்கின்றன. அவற்றை பாதுகாக்க 10 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றபோதும், யானைகள் கிராமங்களுக்குள் வருவது குறைவடையவில்லை.

இதற்காக வருடாந்தம் 600 கோடி ரூபா நிதி ஒதுக்கப்படுகிறது. அதனால், இந்த நடவடிக்கைகளுக்காக புதிய தொழில்நுட்ப வேலைத்திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேபோன்று விகாரைகளில் 2500 முதல் 3 ஆயிரம் பேர் வரை சேவை செய்து வருகின்றனர். இவர்களுக்காக வருடாந்தம் 2.5 பில்லியன் ஒதுக்கப்படுகிறது.

ஆனால், இவர்கள் அங்கு முன்னெடுக்கும் சேவை தொடர்பில் சரியான தகவல் எதுவும் இல்லை. இந்த நிலையில் தொடர்ந்து முன்னெடுக்க முடியாது.

மேலும், நாட்டில் தேசிய மாணவர் படையில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் இருக்கின்றனர். ஆனால், வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் 10 ஆயிரம் பேரே இதில் இணைந்திருக்கின்றனர். குஅதாவது 7 வீதமானவர்களே இருக்கின்றனர்.

அதனால் வடக்கு, கிழக்கில் இருக்கும் இளைஞர்களை தேசிய மாணவர் படையில் இணைத்துக்கொண்டு அவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - என்றார். (05)

# தொழில் சட்ட மறுசீரமைப்புக்கான சட்டமூல வரைவு தயாரிக்கப்பட்டு மக்கள் கருத்துக்காக மீளசமர்ப்பிப்பு

## மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



தற்போதுள்ள தொழில் சட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்புக்கான சட்ட மூல வரைவை எதிர்வரும் ஜூன் மாதம் மேற்கொள்ள எதிர்பார்த்திருக்கிறோம். என்றாலும் சட்டமூல வரைவு மேற்கொள்ளப்பட்டாலும் மீண்டும் மக்களின் கருத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தற்போதுள்ள தொழில் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புக்கான கலந்தாய்வுக் குழு கூட்டத்தின் நான்காவது அமர்வு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

சமகால அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தொலை நோக்கு திட்டத்தில் எதிர்வரும் ஜூன், ஜூலை மாதங்களில் மின்சாரம் கட்டணம் முதலானவை குறையும் சாத்தியம் இருக்கிறது. இதேபோன்று பெருந்தோட்டத்துறை தொழிலாளர்கள் மற்றும் வீட்டுப்பணிப்பெண்கள் ஆகியோரின் நலன்களும் தொழில் சட்ட மூலம் உறுதி செய்யக்கூடியவகையில் தற்போதைய தொழில் சட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் சட்டவரைவு மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதனை மீண்டும் இதுபோன்ற மக்களின் கருத்தாய்வுக்கு உட்படுத்தப்படும். அதன் போது மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்களுக்கு முக்கியத்துவம் வழங்கிய பின்னரே அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும். இது தொடர்பில் எவராவது நீதிமன்றம் செல்லவிரும்பினால் அதற்கும் இடமளிக்கப்படும். இதன் பின்னர்தான் திருத்த சட்ட-மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர் பார்க்கிறோம். மேலும் தற்போதைய பொருளா தாரத்துக்கு மத்தியில் வேலை வாய்ப்பின்றி இருப்போரின் எண்ணிக்கையை அதிகரிக்கவா ? இந்த முயற்சி என்று சிலர் இதனை விமர்சிக்கின்றனர். அவ்வாறான உள்நோக்கம் எதுவும் இல்லை நாட்டை அபிவிருத்தி செய்வதுடன் பாட்டாளி மக்களின் நலன்களையும் சமூக பாதுகாப்பையும் முன்னிலைப்படுத்தி பரந்துபட்ட நோக்கத்துடன் சமகால அரசாங்கம் வெளிப்படையாகவே மேற்கொள்கிறது.

அத்துடன் ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். இவர்களின் சமூக பாதுகாப்பு முக்கியமானது. இதேபோன்று ஓர் ஊழியர் பணியாற்றும் நிறுவனத்திலும் அவருக்கு ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி உறுதி செய்யும் தொழில் சட்ட நடைமுறை வேண்டும். வேலை கொள்வோர் மற்றும் ஊழியர்கள் தமது பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான புதிய வழிமுறைகள் கையாள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். - என்றார். (05)